விலை ரூபா: 7.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

*Valampurii*

பக்கங்கள்:- பதினான்கு

சங்கு 05 | வள்ளுவர் ஆண்டு 2035 | கார்த்திகை 17 | வியாழக்கிழமை | (02.12.2004) | தொலைபேசி - 2223378, 2227644 | ஒலி 349

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் சிறந்து
முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது.

# இடைக்கால வரைபின் அடிப்படையில் பேச்சு நடத்துவதற்கு அரசாங்கம் தயார்

## நோர்வே ஊடாக புலிகளுக்கு அறிவிப்பாம்

(கொழும்பு)

தமிழீழ தேசிய தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் மாவீரர்தின உரை தொடர்பாக ஸ்ரீ லங்கா அரசு தனது உத்தியோகபூர்வ கருத்தை நேற்று வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக தகவல் திணைக்களம் ஊடகங்களுக்கு அறிக்கையொன்றை அனுப்பி வைத்துள்ளது.

அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது,

போர்நிறுத்தத்தை காப்பாற்ற அரசு உரிய முறையில் செயல்படுகின்றது. போர் நிறுத்த மீறல் காரணமாக சாதாரண பொதுமக்கள் மத்தியில் அச்சமும் முரண்பாடுகளும் ஏற்பட்டுள்ளது. இதனை நீக்க இனங்களிடையே சமநிலையைப் பேண அரசாங்கம் முயற்சிக்கின்றது.

வடக்கு கிழக்கு மக்களின் அவசர மனிதாபிமான புனர்வாழ்வு மற்றும் அபிவிருத்திகளை முன்னிறுத்தி இடைக்கால தன்னாட்சி அதிகார சபை தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்த அரசாங்கம் தயாராகவிருக்கின்றது. இது நோர்வே தரப்பு ஊடாக தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

நோர்வேயில் 2002 டிசம்பரில் அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் ஏற்பட்ட இணக்கத்திற்கு அமைய இனப் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வைக் காண்பதற்கு அரசாங்கம் தயாராகவிருக்கின்றது.

(14 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளின் வரைபுக்கு அரசு இணங்கினால்

# தென்பகுதி இளைஞர்கள் ஆயுதம் ஏந்துவர்!

## எச்சரிக்கிறார் ஜே.வி.பி. எம்.பி. நந்தனகுணதிலக

(கொழும்பு)

**தமிழீழ விடுதலைப் புலிகள் சமர்ப்பித்த வடக்கு - கிழக்கிற்கான இடைக் கால தன்னாட்சி அதிகார சபை வரைபை ஜே. வி. பியின் எதிர்ப்பையும் மீறி அரசாங்கம் நடைமுறைப்படுத்துமானால் தென்னிலங்கையில் இளை ஞர்கள் ஆயுதம் ஏந்தவேண்டிய நிலைமை உருவாகும்.**

**இவ்வாறு ஜே. வி. பி. பாராளுமன்ற உறுப்பினர் நந்தன குணதிலக அர சிற்கு எச்சரிக்கை விடுத்துள்ளார்.**

இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை வரைவை சபையில் வாக்கெடுப்புக்கு விட வேண்டும் என்று பாராளுமன்றத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தமைக்கு பதிலளித்து பேசுகையிலேயே நந்தனகுணதிலக இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

புலிகளால் சமர்ப்பிக்கப்பட்ட இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை வரைவு நாட்டைப் பிளவுபடுத்தும் ஆவணம், பிரிவினையை ஏற்படுத்தும் ஆவணம். அதனை சபையில் வாக்கெடுப்புக்கு விடலாம். பிரச்சினையில்லை. ஆனால் அதை அமுல்படுத்த அரசு முற்படுமேயானால் தெற்கில் இளைஞர்கள் ஆயுதம் ஏந்தும் நிலைமை உருவாகும்.

அப்படியொரு நிலை உருவானால் அதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரே பொறுப்பேற்க வேண்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் நிபந்தனையையும் அவர்களின் பிரிவினைவாத அரசியலையும் ஏற்றுக்கொள்ள மக்கள் எவ்விதத்திலும் தயாரில்லை.

இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை வரைவை முன்வைப்பதற்கு புலிகளுக்கு எவ்வளவு உரிமையுள்ளதோ அதேபோல அதனை எதிர்ப்பதற்கு அதே அளவு உரிமை எமக்குப் உள்ளது.

நாங்கள் தமிழ் மக்களுக்கு என்றுமே எதிரிகளில்லை. அவர்கள் எதிர்நோக்கும்

(14 ஆம் பக்கம் பார்க்க)

# உழவு இயந்திரம் மோதி இளைஞன் தலைசிதறிப் பலி

## வட்டுக்கோட்டையில் சம்பவம்

(வட்டுக்கோட்டை)

உழவு இயந்திரம் மோதியதில் இளைஞன் ஒருவர் ஸ்தலத்திலேயே தலைசிதறிப் பலியானார்.

வட்டுக்கோட்டை துணைவிச சந்தியில் இருந்து 500 மீற்றர் தொலைவில் செட்டியார் மடம் செல்லும் வீதியில் நேற்றுக்காலை 9.30 மணியளவில் இவ் விபத்துச் சம்பவம் இடம்பெற்றது.

இச்சம்பவத்தில் வட்டுக்கோட்டை சங்கரத்தையைச் சேர்ந்த கே. கஜேந்திரன் (வயது 20) என்பவரே பலியானவராவர்.

சம்பவம் பற்றித் தெரியவருவதாவது, மோட்டார் சைக்கிளில் பிரஸ்தாப நபர் பயணித்துக் கொண்டிருக்கையில் எதிரே வந்த உழவு இயந்திரம் அவரை மோதியது இதன்போது வீதியோரமாக இருந்த குடிநீர்க் குழாய்க் கம்பத்தில் பிரஸ்தாப நபரின் தலை அடிபட்டது. இதனால் ஸ்தலத்திலேயே பலியானார்.

சம்பவத்தையடுத்து அங்கு குழுமிய அப்பகுதி மக்கள் பிரஸ்தாப இளைஞனின் சடலத்தை யாழ். போதனா வைத்திய சாலைக்கு எடுத்துச் சென்று ஒப்படைத்தனர்.

இச் சம்பவம் குறித்து வட்டுக்கோட்டை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ற-39)

# குருநகர் சம்பவத்திற்கும் புலிகளுக்கும் தொடர்பில்லை

## தேசிய சேவை செய்திக்கு புலிகள் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

குருநகரில் நடைபெற்ற வன்முறைச் சம்பவத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் எந்தவித தொடர்பில்லை என யாழ். மாவட்ட அரசியல்துறையினர் தெரிவித்துள்ளனர்.

குருநகர் மற்றும் திருநகர்ப் பகுதிகளில் பொதுமக்கள் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தியதாகவும் அவர்களே 15 வீடுகளை தீக்கிரையாக்கியதாகவும் இலங்கை வானொலியின் தேசிய சேவையில் நேற்றுக் காலை 6.30 மணிக்கு ஒலிபரப்பான செய்தியில் தெரிவிக்கப்பட்டது.

இச் செய்தி உண்மைக்குப் புறம்பானதொன்றாகும். இச் செய்தியை தமிழீழ விடுதலைப் புலிகள் முற்றாக மறுப்பதாக யாழ். மாவட்ட அரசியல்துறையினர் தெரிவித்தனர். மேலும் இலங்கை வானொலியின் அவதூறான பிரசாரத்தை விடுதலைப் புலிகள் வன்மையாகக் கண்டித்துள்ளனர்.

இச் செய்தி தொடர்பாக யாழ். மாவட்ட அரசியல்துறை பொறுப்பாளர் சி. இளம்பரிதி போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் முறையிட்டுள்ளார். (ச)

## வவுனியாவில் இன்று பூரண ஹர்த்தால்

வவுனியாவில் இன்று வியாழக்கிழமை பூரண ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுவிக்கப்பட்டுள்ளது. வவுனியா தமிழ் மாணவர் ஒன்றியம் இந்த அழைப்பை விடுத்துள்ளது.

மாவீரர்தின நிகழ்வுகளின் போது வடக்கு கிழக்கில் இடம்பெற்ற அசம்பாவிதங்கள் குறிப்பாக வேப்பங்குளம் பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் குறித்து தமது கண்டனத்தை வெளிப்படுத்தும் முகமாகவே இந்த ஹர்த்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக தமிழ் மாணவர் ஒன்றியத் தலைவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை மன்னாரிலும் இன்று ஹர்த்தால் அனுஷ்டிக்கப்படுகிறது. (க)

# வீடு புகுந்த கும்பல் இருவரை வெட்டியது!

## நேற்றிரவு பரமேஸ்வராச் சந்தியில் கொடூரம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பரமேஸ்வராச்சந்தியில் உள்ள வீடொன்றினுள் நேற்றிரவு 8.30 மணியளவில் நுழைந்த கும்பல் ஒன்று அங்கிருந்த ஒரு பெண் உட்பட இருவரை வெட்டிக் காயப் படுத்தியுள்ளது.

காயமடைந்தவர்கள் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இச் சம்பவத்தின்போது நிர்மலன் பிரகாஸ் (வயது 23), அவரது சித்தியான கே. குணேஸ்வரி (வயது 55) ஆகிய இருவருமே வெட்டுக்காயங்களுக்கு உள்ளானவர்களாவர்.

சம்பவம் பற்றி தெரியவருவதாவது, நேற்றிரவு 8.30 மணியளவில் காரில் வந்திறங்கிய ஆறு பேர் அடங்கிய குழு ஒன்று வீட்டினுள் நுழைந்து பிரகாசின் தம்பியை

(14 ஆம் பக்கம் பார்க்க)

# குருநகர் பதற்றத்தை தணிக்க நேற்று முக்கிய கலந்துரையாடல்

(திருநெல்வேலி)

குருநகர்ப் பகுதியில் இடம்பெற்ற கோஷ்டி மோதலைத் தொடர்ந்து உருவான பதற்ற நிலையை அடுத்து அப்பகுதியில் அமைதியை நிலைநாட்டி சமாதானத்தையும் சுமுகமான இயல்பு நிலையையும் ஏற்படுத்தும் நோக்கில் சம்பந்தப்பட்டவர்களுக்கிடையில் கலந்துரையாடல் ஒன்று யாழ். லொயலாஸ் மண்டபத்தில் நேற்று பிற்பகல் 2 மணிக்கு இடம்பெற்றது.

இதில் இராணுவத்தின் 512 ஆவது படைத்தளபதி, யாழ். ஆயர் இல்லத்தைச் சேர்ந்த ஜெயசேகரம் அடிகளார், குருநகர்ப் பங்குத் தந்தை சகாயநாயகம் அடிகளார் மற்றும் குருநகர், திருநகர் கடற்றொழிலாளர்

(14 ஆம் பக்கம் பார்க்க)

.நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## இன்று ஒரு தகவல்

# ஞானம்

ஒரு பெரிய சந்தை பலபேர் வந்துபோகும் இடம். அங்கே ஒருவன் பிச்சையெடுத்துக்கொண்டு நின்றான். நீண்ட காலமாக அவன் ஒரே இடத்தில் நின்று பிச்சையெடுத்தான். ஆனாலும் அவன் வாயைத் திறந்து பிச்சைபோடுங்கள் என்று யாரையும் கேட்பதில்லை. தினமும் காலையில் வருவான் அந்த இடத்தில் நிற்பான். வலது கையை மட்டும் முன்னால் நீட்டி ஏந்திக்கொண்டிருப்பான். வாயைத் திறந்து எதுவும் பேசுவதில்லை. அந்த வழியாக வருவோர் போவோரெல்லாம் அவனது கையில் காசு போடுவார்கள்.

அந்த ஒரே இடத்தில் நின்று 50 வருடங்களாக அவன் பிச்சையெடுத்துக் கொண்டிருந்தான். திடீரென்று ஒருநாள் அவன் இறந்துவிட்டான். இறந்து போய் அந்த இடத்திலேயே விழுந்துவிட்டான். ஊர்மக்கள் பார்த்தனர் ஐயோ பாவம். இப்படி அநாதையாக விழுந்து இறந்துவிட்டானே என்று பரிதாபப்பட்டனர். அவன் மீது அந்த ஊராருக்கு மிகுந்த அனுதாபம்.

இவன் பிச்சையெடுத்துக் கொண்டிருந்தாலும் கூட ஒரு வித்தியாசமான ஆள் யாரையும் தொந்தரவு செய்வதில்லை. ஊர்மக்கள் எல்லோரும் ஒன்று கூடி தீர்மானம் எடுத்தார்கள். இந்த பிச்சைக்காரனுக்கு இதே இடத்தில் ஒரு சிலை வைக்க வேண்டும் என்று உடனே நிதி வசூலிக்க ஆரம்பித்தார்கள். பலரும் முன்வந்து தாராளமாக நிதி கொடுத்தார்கள். அதிக பணம் சேர்ந்தது.

அந்த ஆள் நின்று கொண்டிருந்த இடத்திலேயே அத்திபாரம் தோண்ட ஆரம்பித்தனர். இரண்டு அடி ஆழம் தோண்டியிருப்பார்கள். திடீரென்று ஒரு வித்தியாசமான சத்தம் டங்டங் என்று கேட்டது. அவசரம் அவசரமாகத் தோண்டிப்பார்த்தார்கள். ஒரு செப்புக்குடம் தெரிந்தது. அதை எடுத்து உள்ளே என்ன இருக்கிறது என்று பார்த்தார்கள். ஏராளமான தங்கநாணயம், வெள்ளிக்காசு எல்லாம் இருந்தது.

அதைப்பார்த்ததும் கூட்டத்திலிருந்தவர்களுக்கு மிகுந்த ஆச்சரியம். ஒருவர் சொன்னார் "பார்த்தீர்களா இந்தப் பிச்சைக்காரன் தனது காலுக்கு அடியில் புதையல் இருப்பது தெரியாமல் போவோர் வருவோரிடம் பிச்சையெடுத்திருக்கிறான்" என்றார். அப்போது அந்த வழியாக ஒரு துறவி வந்தார். கூட்டத்தைப் பார்த்துச் சொன்னார். "ஆமாம்! ஒவ்வொரு மனிதனுமே இப்படித்தான் செய்து கொண்டிருக்கிறான். தனது மனதில் குவிந்துள்ள திறமையையும் மகிழ்ச்சியையும் இன்பத்தையும் தெய்வத்தையும் அவன் புரிந்துகொள்வதில்லை. அது வெளியே எங்கேயோ இருப்பதாக நினைத்துக்கொண்டு அதைத் தேடிக் கொண்டே காலத்தைக் கழிக்கிறான்" என்று கூறி விட்டு அந்தத் துறவி போய்விட்டார். கூட்டத்திலிருந்தவர்கள் அதன பின்புதான் சிந்திக்க ஆரம்பித்தார்களாம்.

இந்தக் கதை எதற்காக என்றால் நம்மிடமுள்ளவற்றை நாம் சரியாகத் தெரிந்துகொள்வதில்லை. ஆனால் அவற்றைத் தேடி வெளியே அலைந்து கொண்டிருக்கிறோம் என்பதை சுட்டிக்காட்டுவதற்காகத்தான் அந்தச் சந்தியிலுள்ள பெட்டிக்கடையில் அரைக்கிலோ மகிழ்ச்சியை வாங்கிக்கொண்டு வா என்றா சொல்ல முடியும்.

ஜீனாய்ட் என்று ஒரு ஞானி இருந்தார். ஒரு சீடன் அவரிடம் வந்தான் "உங்களிடம் ஞானம் என்ற முத்து இருப்பதாகச் சொல்கிறார்களே எனக்கு அதில் கொஞ்சம் தேவை. ஒன்று அதை என்னிடம் விற்று விடுங்கள் அல்லது அன்பளிப்பாகத் தாருங்கள்" என்று கேட்டான்.

அதற்கு அந்த ஞானி "உனக்கு அதை நான் விற்பதாக இல்லை ஏனென்றால் அதன் விலையை உன்னால் கொடுக்க முடியாது. சரி அன்பளிப்பாகக் கொடுக்கலாம் என்றால் அதை நீமதிக்க மாடடாய். அதனால் என்னை மாதிரி நீயும் கடவுள என்ற சமுத்திரத்தில் மூழ்கினால் ஒரு முத்து எடுதது வரலாம் என்றார். இவை வெளியே வாங்கும் பொருள் அல்ல முயற்சி வேண்டும்.

ஒரு ஆசாமி அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பில் 10 ஆயிரம் ரூபா விழுந்ததாகக் கனவுகண்டார். விடிந்து எழுந்ததும் அழுது கொண்டே உட்கார்ந்திருந்தார். ஏன்? கண்டது கனவாகிவிட்டதே என்பதற்காகவா? இல்லை. ஏன் ஐயா அழுகிறீர்கள் என்று கேட்டால் "கனவில் விழுந்தது ஒரு லட்சமாக இல்லாமல் போய்விட்டதே அதை நினைத்தால்தான் எனக்கு ஆத்திரமாக வருகிறது" என்று கூறிவிட்டு மீண்டும் ஓவென்று அழ ஆரம்பித்து விட்டார்.

**தென்கச்சி கோ. சுவாமிநாதன்**

# ஜனாதிபதிக்கான நிதியொதுக்கீட்டுப் பிரேரணை 61 மேலதிக வாக்குகளால் நிறைவேறியது

(கொழும்பு)

ஜனாதிபதியின் செலவினங்களுக்கான நிதி ஒதுக்கீட்டுப் பிரேரணை 61 மேலதிக வாக்குகளால் பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நிறைவேற்றப்பட்டது.

இந்தப் பிரேரணைக்கு ஆதரவாக 113 வாக்குகளும எதிராக 52 வாக்குகளும் அளிக்கப்பட்டன. ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கத்தின் பாராளுமன்ற உறுப்பினர்களுடன், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், ஜாதிக ஹெல உறுமயக் கட்சி ஆகியவற்றின் பிரதிநிதிகளும் இப்பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்தனர்.

ஐக்கிய தேசியக்கட்சியும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் இதற்கு எதிராக வாக்களித்தன.

இப்பிரேரணையை நிறைவேற்றுவதற்கு வாக்கெடுப்பு ஒன்று நடாத்தப்படவேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்றக குழுத்தலைவர் இரா. சம்பந்தன் வேண்டுகோள் விடுததையடுத்து வாக்கெடுப்பு நடாத்தப்பட்டது.

இதேவேளை, பிரதமரின் செலவினங்களுக்கான நிதி ஒதுக்கீட்டுப் பிரேரணை உட்பட 21 விடயங்களுக்கான ஒதுக்கீட்டு பிரேரணைகள் வாக்கெடுப்பின்றி அன்றைய தினம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

(ற-4)

# சுகாதார அமைச்சினது ஆலோசனையில் எய்ட்ஸ் விழிப்புணர்வு நடவடிக்கைகள்

(சுதுமலை)

உலக எய்ட்ஸ் தினத்தை முன்னிட்டு கிராமிய மக்களிடையே எய்ட்ஸ் விழிப்புணர்வு செயற்றிட்டங்களை முன்னெடுக்குமாறு சுகாதார அமைச்சின் எய்ட்ஸ் தடுப்புப்பிரிவு மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளருக்கு கடிதம் மூலம் அறிவுறுத்தியுள்ளது.

இளவயதினரிடையே எச்.ஐ.வி. தொற்றை இல்லாமல் ஒழித்தல் மற்றும் எய்ட்ஸின் அபாயம் குறித்து மககளுக்கு தெளிவுபடுத்தல் என்பவற்றை தொனிப்பொருளாகக் கொண்டே இச் செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

உலகளாவிய ரீதியில் பார்க்கும் போது எய்ட்ஸ் தொற்றுக்குள்ளானவர்களில் ஒரு பகுதியினர் இலங்கையிலும் வாழ்கின்றனர்.

எனவே இதனைத் தடுப்பதற்கு விழிப்புணர்வு நடவடிக்கைகள் அவசியம்.இவ்வாறான விழிப்புணர்வுகளை அடிமட்டத்தில் மேற்கொள்ளவேண்டும்.

இதறகான விழிப்புணர்வுகளில் எச்.ஐ.வி.தொற்று, தொற்றிலிருந்து பாதுகாப்பாக வாழ்தல் அதற்கான வழிமுறைகள் என்பன உள்ளடக்கம் பெறவேண்டும் எனவும் குறிப்பிட்டே இவ் அறிவித்தல் விடுக்கப்பட் டுள்ளது. அத்துடன் எய்டஸ் விழிப்புணர்வு செயற்றிட்டம் குறித்த அறிக்கையும் அமைச்சினால் கோரப்பட்டுள்ளது.

(ப-252)

## இராசிபலன்

**02.12.2004**
**கார்த்திகை 17, வியாழக்கிழமை**
**பஞ்சமி முற்பகல் 11.16 மணிவரை**
**பூசம் நண்பகல் 12.05 மணிவரை**
**இராகுகாலம் 1.45 -3.15 மணிவரை**
**சுபநேரம் 7.45 - 9.15 மணிவரை**
**விநாயகர் விரதம் 6 ஆம் நாள்**

**மேடம்** கல்வியில் ஆர்வம், புதிய விடயம், மாதா சுகம், ஆரோக்கியக் குறைவு.

**இடபம்** கூட்டு முயற்சி, மனோதைரியம், நல்ல செய்தி, தொழில் விருத்தி

**மிதுனம்** மனோசங்கடம், கௌரவக் குறைவு, எடுத்த காரியம் தாமதமாகும், பண விரயம்.

**கடகம்** ஜனவசியம், வெகுமானம் போசன சுகம், சயன சுகம்.

**சிங்கம்** சோம்பல் நிலை, கற்பனை மிகுதி, பணவிரயம், பிரயாணம்.

**கன்னி** ஆனந்தம், நண்பர்கள் சந்திப்பு, பொருள் சேர்க்கை, பெருமையடைதல் .

**துலாம்** அதிகாரம், ஆரோக்கியம், பிறருக்கு உதவுதல், காரிய சித்தி.

**விருச்சிகம்** சரீரப்பிரயாசை, வீண்பயம், புதிய திட்டமிடல் , கட்டுப்பாடு.

**தனுசு** அமைதிக்குறைவு, பணக்குறைவு, காரிய தாமதம், உடல் நலக்குறைவு.

**மகரம்** தேகசௌக்கியம், கீர்த்தி, தொழில் நன்மை, தெய்வசிந்தை.

**கும்பம்** தடைப்பட்ட காரியம் கைகூடும், தொழில் நன்மை, நல்ல வரவேற்பு, தனவரவு.

**மீனம்** தாழ்ந்த சுபாவம், காரியஇடையூறு, அஜீரண ரோகம், பணக்குறைவு.

**பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது**
**- வளவன்**

# வெளிநாட்டுத் தூதுவர்களை முஸ்லிம் காங்கிரஸ் சந்திக்கும்

(கொழும்பு)

தற்போதைய அரசியல் சூழ்நிலை குறித்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைமைப்பீடம் சமாதான முயற்சிக்கு அனுசரணையாளராக செயற்படும் நோர்வே மற்றும் இலங்கையின் உதவி வழங்கும் மாநாட்டுக்கு இணைத் தலைமை வகித்த அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் ஜப்பான் ஆகிய நாடுகளின் தூதுவர்களை அடுத்த வாரம் சந்தித்துப் பேசவுள்ளது.

சமாதானப் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்படாத நிலையில் விடுதலைப்புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் பொறுமையின் எல்லையில் தாம் நிறபதாக எச்சரிக்கை விடுத்துள்ள சூழ்நிலையில், முஸ்லிம் காங்கிரஸ் தலைமை இத் தூதுவாகளை சந்தித்துப் பேசவுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும் (க)

# வெடி கொளுத்திய தகராறு; கைகலப்பில் இருவர் காயம்

(யாழ்ப்பாணம்)

மரண ஊர்வலத்தின் போது வெடியைக் கொளுத்தி வீதியால் சென்றவர்களிடையே வீசியதன் விளைவாக ஏற்பட குழு மோதலில் இருவர் காயமடைந்து யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இருபாலையில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற இச்சம்வபம் தொடர்பாகத் தெரிய வருவதாவது,

வீதியில் பிரேத ஊர்வலம் சென்று கொண்டிருந்த போது வெடியைக் கொளுத்தி வீதியில் சென்று கொண்டிருந்த பெண்களிடையே வீசியதன் விளைவாக,இளைஞர் குழு ஒன்றிற்கும் வெடி கொளுததிப் போட்டவர்களுக்குமிடையே மோதல ஏற்பட்டது. இதனால் இருவர் காயமடைந்தனர்.

இதனையடுத்து, சம்பவ இடத்திற்கு விரைந்த கோப்பாய் பொலிஸார் நிலைமையைக் கட்டுப்படுததியதுடன் இச் சம்வத்துடன் தொடர்புடைய சந்தேகத்தின் பேரில் நபர் ஒருவரையும்கைது செய்தனர்.

(ற-5)

# திருமலை வன்முறைக்கு ஜே.வி.பியே காரணம்

## எழிலன் குற்றச்சாட்டு

(திருமலை)

திருமலையில் இடம்பெற்ற வன்முறைச் சம்வங்களுக்கு ஜே.வி.பியினரும் சிங்களக் காடையர்களுமே காரணம் என திருமலை அரசியல் துறைப் பொறுப்பாளர் எழிலன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இச்சம்பவங்கள் தொடராது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவில் முறையிடப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக ஊடகம் ஒன்றுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைக குறிப்பிட்டார். கடந்த காலங்களில் சிங்கள மக்கள் திருமலையில் பல நிகழ்வுகளை நடத்தியுள்ளனர். இதன்போது தமிழ் மக்கள் கௌரவமான முறையில் நடந்து கொண்டனர்.

ஆனால் திருமலையில் தமிழ் மக்களின் நிகழ்வுகளின் போது ஜே.வி.பியினரும் சிங்களக் காடையர்களும் மோசமான முறையில் கீழ்த் தரமாக நடந்து கொண்டுள்ளனர்.

இவ்வாறான மோசமான சம்பவங்களுக்கு ஜே.வி.பியே காரணம் என்பதைத் தெரிவிப்பதோடு இச் சம்பவத்தை வன்மையாகக் கண்டிக்கின்றேன்.

இது குறித்து போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவில் முறையிட்ட போதும் எதுவித மாற்றமும் ஏற்படவில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(ற-4)

விடுதலைப்புலிகள் தங்கள் இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை முன்மொழிவுகளை நோர்வேயிடம் கையளித்து கிட்டத்தட்ட ஒருவருடம் பூர்த்தியாகப் போகிறது. சிங்கள மக்களை சங்களாகவே இருக்கின்றன.'வடக்கு கிழக்கு மக்களின் அபிவிருத்தித் தேவைகளுக்கு அப்பாலும் இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபையைப் புலிகள் கொண்டுபோயிருப்பதால் இறுதித் தீர்வில் 20வீத விடயங்களில் மட்டுமே பேசித் தீர்த்தல் அவசியமாக இருக்கிறது என ஜனாதிபதியின் ஆலோசகரும், முன்னாள் மாகாணசபை அமைச்சருமான தயான் ஜயதிலக, யில் ஏற்கனவே சூடானின் உள்நாட்டுப் பிரச்சினைத் தீர்வில் செய்யப்பட்ட இடைக்காலநிர்வாக ஒப்பந்தத்தின் சில சரத்துக்களைப் பார்ப்போம்.

# இடைக்கால நிர்வாக வரையும்

இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை குறித்த எண்ணக் கருக்களை உள்வாங்கும் நிலைக்கு ஆயத்தப்படுத்தாமலே இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபையில் உள்ள விடயங்கள்



அவர்கள் முன்வைக்கப்பட்டுவிட்டதாக, இனப் பிரச்சினை சுமுகமாக தீர்வதில் ஆர்வம்கொண்ட சிங்களத் தரப்பினர் கூறுகின்றனர்.

தென்னிலங்கையிலிருந்து வெளிவரும் கிட்டத்தட்ட அனைத்து சிங்கள, ஆங்கிலப் பத்திரிகைகள் எதிர்மறைப் பங்களிப்பையே வழங்கி வருகின்றன.

விவாதிக்கப்படவேண்டிய அடிப்படை விடங்களை புலிகளே முன்கொண்டு வந்திருக்கிறார்கள். இது பாராட்டப்படவேண்டும்'என்று தேசிய சமாதான கவுன்சில் பணிப்பாளர் ஜெஹான் பெரேரா கூறியுள்ளார்.

'புலிகளின் கோரிக்கைகள் பிரிவினைவாத இயல்பு கொண்டவையாக இருக்கின்றன. உதாரணமாக ஆழ்கடல் மீதான அதிகாரங்கள் தொடர்பான முரண்பாடுகளை சர்வதேச நடுவர் மன்றத்துக்கு எடுத்துச் செல்லுதல் என்பது இருநாடுகளுக்கு இடையேதான் இடம் பெறும். ஒரே சமஷ்டியினுள் இருக்கும் இரு கூறுகளுக்கு பொருந்தாது' என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

அடுத்து கலாநிதி குமார் ரூபசிங்க, 'அரசு நிர்வாகத்தில் தமிழை நியாயமான அளவில் பயன் படுத்துவதில் தொடர்ந்துவந்த அரசுகள் தவறி விட்டன. மக்கள் தங்கள் சொந்த மொழியைப் பயன்படுத்துவதைத் தடுப்பதென்பது ஒரு மனிதனின் அடிப்படை மனித உரிமைகளை அப்பட்டமாக மீறுவதாகும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

## வட-கிழக்கின் நிலை


வடக்கு கிழக்குப் பகுதிகள் தொடர்ச்சியான குறை அபிவிருத்தி, போர் ஏற்படுத்திய அழிவுகளும் படுநாசங்களும் என்பவற்றால் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கின்றன. இராணுவம் நிலை கொண்டுள்ள பகுதிகளிலிருந்து வெளியேற மறுப்பதால் 156 பள்ளிகள் மூடப்பட்டுள்ளன. 144 பள்ளிகள் மரங்களின் கீழும் முறையாக நிர்மாணிக்கப்படாத

இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை, புலிகளின் இராணுவம், புலிகளின் கடற்படை - தனிநாடு,புலிகளின் கடற்படை, புலிகளின் இராணுவம் இல்லாத இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபையை ஓரளவு மாற்றங்களுடன் ஏற்றுக்கொள்ளமுடியும்.ஒன்றை நேர்மையாக ஒப்புக்கொள்வோம். புலிகளிடம் துப்பாக்கிகள் இல்லாவிட்டால் சிங்களவர்கள் இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை பற்றி கதைக்கக்கூட மாட்டார்கள் என்கின்றார் அவர் .

## அரசியல் கட்சிகளின் நிலைப்பாடு

இந்த இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை தொடர்பான பிரதான கட்சி களின் நிலைப்பாட்டைப் பற்றி ஜெஹான் பெரேரா குறிப்பிடும்பொழுது, இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை என்பது பிரிவினைக்கான முன்மொழிவு என்று கூறி அதனை ஒட்டுமொத்தமாக நிராகரித்து இருக்கும் ஜே.வி.பியினர் இடைக்கால நிர்வாக அமைப்புக்கு ஆதரவுவழங்க முன்வந்துள்ளனர்.ஜே.வி.பியின் கடும் போக்காளர்கள் போர்மூலம் புலிகளை ஒழித்துக்கட்டவே விரும்புகிறார்கள். ஜே.வி.பியின் தலையீடின்றி அமைதி முயற்சிகளை முன்நகர்த்தவே ஜனாதிபதி ஐ.ம.சு கூட்டமைப்பின் தலைமைப் பதவியில் இருந்து விலகினார்.

அந்த முயற்சிக்கு ஜே.வி.பியின் ஆதரவு கிட்டாது என்ற நிலையில், அடுத்த தெரிவாக ஐ.தே.க. இருக்கிறது.ஸ்ரீ.சு.க.வும் ஐ.தே.கவும் 50வருடம் பகையாளிகளாக இருந்தாலும் இரு



## சூடான் ஒப்பந்தம்

கடந்த2002, யூலையில் செய்யப்பட்ட மக்காகொஸ் உடன்படிக்கையில் இடைக்காலத்தின்போது வெவ்வேறு கட்டளைப்பீடங்களின் கீழ் இரண்டு இராணுவங்களை சூடான் கொண்டிருக்கும். விரிவான சமாதான ஒப்பந்தம் கைச்சாத்தாகி இரண்டு வருடங்களில் அரசுப் படைகளில் 10ஆயிரம் பேர் தவிர்ந்த 80வீதமானோர் மீளப்பெறப்படுவார்கள்.

படைகளில் 80சதவீதத்தை தென் சூடானில் வைத்திருக்கலாம்.6வருட சுயாட்சி வழங்கப்படும். வடக்கில் 'ஷாரியா சட்டம் (இஸ்லாமிய சட்டங்கள்) வழக்கிலிருப்பது ஏற்கப்படும்.

அத்துடன் எண்ணெய் மூலமான வருமானத்தைப் பகிர்ந்துகொள்வது, நீர் வளங்கள் கொண்ட மலைப் பகுதிகளின் தகுநிலை, அரசியல் அதிகாரப் பகிர்வு

# தென்னிலங்கை நிலைப்பாடும்



சுமுகமான தீர்வுக்கு இணக்கமான சூழ்நிலைகளைப் புலிகள் ஏற்படுத்த வேண்டும் என்று இத்தரப்பினர் கூறுகின்றனர்.

இந்த ஒருவருட காலத்தில் வெளிவந்த சிங்கள, ஆங்கில பத்திரிகைகள் இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை வரைபுகள் வெறும் முன்மொழிவுகள் தான், இவற்றை அடிப்படையாக வைத்து பேச்சுக்கள் நடக்கப் போகின்றன. அப்போது சமரசங்களுக்கும் விட் டுக் கொடுப்புகளுக்கும் இடமிருக்கலாம் என்பதைக் கூறாமல், சிங்கள மக்களுக்கு பூச்சாண்டி காட்ட முனைகிறார்கள்.

## பேச்சு மூலம் தீர்வு

பேச்சுவார்த்தை மூலம் இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை நிறுவப்படுவதை பலவருடகால பிரிவினைவாதப் போரின்பின் நிகழும் மீள் இணைவுக்கான முன்னோடி நிகழ்வாகப் பார்க்க வேண்டும் என்று பேராசிரியர் ஜயதேவ உயங்கொட கருத்து தெரிவித்துள்ளார்.'பொலிஸ், வரிவிதிப்பு, நிலம், நீதித்துறைத்கென புலிகளால் கோரப்பட்டிருக்கும் அதிகாரங்கள் அநேகமான சமஷ்டி முறைகளின் அடிப்படை அம்

கொட்டில்களிலும் இயங்கின்றன. இடை விலகுவோர் தொகை 15வீதமாக இருக்கிறது. இது தேசிய சராசரியின் நான்கு மடங்காகும்.

500 பாடசாலைகளும் கிட்டத்தட்ட 15 ஆயிரம் வகுப்பறைகளும் கடுமையாக சேதமுற்றுள்ளன. இரண்டு போதனா வைத்தியசாலைகளும் ஒரு பொது வைத்தியசாலையும் மட்டுமே வட-கிழக்கில் இருக்கின்றன.25 வீதம் சுகாதார நிலையங்கள் சேதமாகிவிட்டன. 50 வீதம் தாய்மார் மந்த போஷணைக்குட்பட்டுள்ளனர். 5 வயதுக்குக் கீழ்ப்பட்டவர்களில் 50 வீதமானோர் குறைவான எடையை கொண்டுள்ளனர்.

பொதுவாகவே சிறுவர்கள் புற அதிர்ச்சிகளால் ஏற்பட்ட உளத்தாக்கங்களுக்கு உட்பட்டிருக்கிறார்கள். இவை ஆசிய உலக வங்கிகளின் கணிப்புகளில் இருந்து தெரியவந்துள்ளது.

## இராணுவத்தினரின் முட்டுக்கட்டைகள்

வடக்கு கிழக்குப் பகுதிகளின் 55 வீதம் விவசாயிகளுக்கு அவசியமான பசளைகள் மீதான தொடர்ச்சியான தடை, விவசாய உற்பத்தித் திறனை சேதப்படுத்தியுள்ளது. படையினரின் தொடர்ச்சியான வலிந்த தாக்குதல்கள் உட்கட்டுமாணங்களை நாசமாக்கி விட்டிருக்கிறது. படையினரின் உயர்பாதுகாப்பு வலயங்களுள் பயிர்நிலங்கள் உள்ளன. மிகப் பெரும்பாலான பகுதிகளுக்கு மின்வழங்கல் துண்டிக்கப்பட்டிருக்கின்றது. தொலைத்தொடர் புகள் மற்றும் சேவைகள் செயற்படவில்லை.

## அரசு-புலிகளின் முன்மொழிவுகள்

கடந்த இரண்டு தசாப்தங்களாக ஆட்சிக்குவந்த அரசுகள் மிகக் குறைந்தளவு தீர்வுகளை மிகவும் காலம் கடந்து முன்வைத்துள்ளன.'ஒரு இடைக் காலத் தன்னாட்சி அதிகாரசபைக்காகத்தான் கடந்த பொதுத்தேர்தலில் தமிழ்மக்கள் வாக்களித்தார்கள். அரசின் முன்மொழிவுகளுக்கும் புலிகளின் முன்மொழிவுகளுக்குமிடையே, 70வீத விடயங்களில் ஒற்றுமை இருக்கிறது. 10வீதம் மேலதிக தெளிவுபடுத்தல் தேவை,

கட்சிகளினுள்ளும் அமைதி முயற்சிகள் தொடர்பாக நெருக்கமாகவுள்ள முக்கிய குழுவினர் இருக்கிறார்கள் என்று குறிப்பிட்டுள்ளார்.

'இடைக்கால தன்னாட்சி அதிகாரசபையை அடிப்படையாகக்கொண்டு பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்டால் தாம் அதற்கு ஆதரவு வழங்குவோம்' என ஐ.தே.க. அறிவித்துமுள்ளது. ஐ.நாவில் பொருண்மிய விவகார அதிகாரியாகவும் அதற்கு முன்னர் மண்ணியல் ஆய்வு திணைக்களப் பணிப் பாளருமாக பணியாற்றியவரான துலிப் ஜயவர்த்தன என்பவர் இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை வழங்கப் பட்டால் வளங்கள் இழக்கப்படும் அபாயம் பற்றி சுட்டிக் காட்டுகிறார்.

## ஒஸ்லோ உடன்படிக்கை

ஒஸ்லோ மகாநாட்டில் சமஷ்டித் தீர்வுக்கு இணங்கி இருதரப்பும் வெளியிட்ட அறிக்கையில் வரலாற்று ரீதியாக தமிழர் வாழ்ந்த பகுதிகளில் உள்ளக சுய நிர்ணய கோட்பாட்டு அடிப்படையில் அமைந்த தீர்வொன்றை பெற வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டது. எனவே, புதிதாக ஒரு கோரிக்கை இங்கே எழவில்லை. நிலம் இடைக்கால தன்னாட்சி அதிகாரசபையின் கீழ் வரும்போது அது சார்ந்த கடலும் கண்டமேட்டு உரிமைகளும் இடைக்கால தன்னாட்சி அதிகாரசபைக்குக் கீழ் வருவது தவிர்க்க முடியாததாகும்.

## குடிசன மதிப்பீடு

இலங்கையின் சராசரி குடிசன அதிகரிப்பு 4சதவீதமாகும் இனங்களின் குடிசனத்தொகை இதற்கு அமைவாக அதிகரித்து அல்லது குறைந்து செல்கையில் சிங்களவர்களின் தொகை சுதந்திரத்தின் பின் பாரிய அளவில் அதிகரித்துச் சென்றது எப்படி? தமிழர்களின் தொகை பெருமளவில் குறைந்தமைக்கு, அவர்கள் பலவந்தமாக இடம் பெயர்க்கப்பட்டமை மற்றும் கொலை செய்யப்பட்டமை தான் காரணமாகும்.

ஒரு நாட்டின் உள் நாட்டு பிரச்சினைக்கு ஒரு நாட்டுக்கு பொருத்தமாக இருந்த தீர்வு இன்னொரு நாட்டுக்கு 100 சதவீதம் விழுக்காடு பொருந்தா தெனினும்,

புலிகளின் நிலைப்பாடு எவ்வளவு நியாயமானது என்பதை நிறுவும் வகை



என்பன பேசித்தீர்க்கப்பட வேண்டியவையாகும்.

## அரசியலமைப்பு திருத்தம்

இலங்கை அரசியலமைப்புக்கு வெளியே இடைக்கால தன்னாட்சி அதிகாரசபைத் தீர்வுகாண முடியாது என்று கூறப்படுகிறது. அரசியலமைப்பு தீர்வுக்கு இணக்கமாக இல்லாவிடின் தீர்வுக்கு இணக்கமாக அரசியலமைப்பை மாற்ற முடியாத அளவுக்கு அது ஒன்றும் புனிதத்துக்குள் புனிதமானது அல்ல.

ஏற்கனவே 17முறை திருத்தியமைக்கப்பட்டுள்ளது. தனிப்பட ஒரு சந்திரிகாவின் பதவி நீடிப்புக்காக அரசியலமைப்பை திருத்த முயற்சி எடுக்க முடியுமாயின், முழுநாட்டு மக்களினதும் நலனுக்காக அரசியலமைப்பை 18வது தரம் திருத்துவது என்பது ஒன்றும் கடினமான விடயமல்ல. அத்தோடு இந்த இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை ஏற்பாடு 5 வருடங்களுக்கே நடைமுறையிலிருக்கும் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

எனவே, சிங்களம் தனது தனிப்பட்ட அல்லது கட்சிசார்ந்த நலன்களுக்கு அப்பாற்பட்டு தமிழ்மக்களின் நிலைப்பாட்டை புரிந்து கொண்டு இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை முன்மொழிவுகளை அடிப்படையாகக் கொண்டு பேச்சுவார்த்தைக்கு முன்வரவேண்டியது அத்தியாவசியமானதாகும்.

*(நன்றி இணையத்தளம்)*

# செய்தித்துளிகள்

## டிப்ளோமா பாடநெறிக்கு விண்ணப்பம் கோரல்

(கொழும்பு)

கொழும்பு பல்கலைக்கழகத்தின் சட்ட பீடத்தினால் நடத்தப்படும் மனித உரிமைகளும், சமாதானக் கற்கை நெறிகளுக்குமான டிப்ளோமா பாடகற்கை நெறிக்கான விண்ணப்புங்கள் கோரப்பட்டுள்ளன.

இது சம்பந்தமான விபரங்களைப் பணிப்பாளர் பேராசிரியர் ரவீந்திர பெர்னாண்டோ அறிவித்துள்ளார்.

மனித உரிமை தொடர்பான துறைகளில் ஈடுபாடு உள்ளவர்கள் இப்பாடநெறியைப் பயில்வதற்காக விண்ணப்பிக்கலாம்.

12 மாதங்கள் தொலைக் கல்வி முலமாக இப்பாடநெறி நடாத்தப்படும். பாடநெறி, தமிழ், சிங்களம் ஆகிய மொழிகளில் போதிக்கப்படும்.

இப்பாடநெறிக்கு விண்ணப்பிப்பதற்கான இறுதித் திகதி டிசம்பர் 15 எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## ஆன்மீகப் பேருரை

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறையும், ஆன்மிக விழிப்புணர்வு வட்டமும் இணைந்து, எதிர்வரும் 12,13 ஆம் திகதிகளில் நாவலர் கலாசார மண்டபத்தில் 'கர்ம யோகமும் தியான விழிப்புணர்வும்' எனும் தலைப்பில் மாலை 5.00 மணிக்குப் ஆன்மீகப் பேருரையை நடாத்தவுள்ளன.

இந்தியாவில் இருந்து வருகை தந்திருக்கும் சுவாமி யோகேஸ்வரானந்தா, ஆன்மீகப் பேருரைகளை நிகழ்த்தவுள்ளார்.

அத்துடன், எதிர்வரும் 14 ஆம் திகதி கந்தர்மடத்தில் உள்ள ஆனந்தா ஆச்சிரமத்தில் முற்பகல் 10.00 மணி தொடக்கம் 12.00 மணிவரை 'சற்சங்கமம்' என்ற நிகழ்ச்சியிலும் இவர் கலந்துசிறப்பிக்கவுள்ளார். (ற-5)

## வீடியோ படக்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழகத் திரைப்பட வட்டத்தின் ஏற்பாட்டில், எதிர்வரும் 5 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு புவியியற்றுறை மண்டபத்தில் புகழ்பெற்ற நெறியாளர் ஜீல்லோ பொன்ரிகோர்வோவின் இயக்கத்தில் உருவான 'Battle of Algi ers' எனும் பிரெஞ்சு மொழித் திரைப்படம் ஆங்கிலத் துணைத்தலைப்புக்களுடன் காணப்பிக்கப்படவுள்ளது.

இத் திரைப்படம் அல்ஜீரியாவில் இடம்பெற்ற விடுதலைப் போராட்டத்தைச் சித்தரிக்கும் உன்னத திரைப்படமாகும்.

படக்காட்சியின் இறுதியில், எழுத்தாளர் அ.யேசுராசா, க.சட்டநாதன் ஆகியோரின் வழிகாட்டலின் கீழ், காண்பித்த திரைப்படம் பற்றிய கலந்துரையாடல் ஒன்றும் இடம்பெறவுள்ளது.

ஆர்வலர்கள் வருகை தந்து பயன்பெற முடியுமென ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ற)

## பெற்றோல் மக்ஸ் வழங்கல்

(மருதங்கேணி)

யாழ்.மாவட்டத்தில் இடம். பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்களில் வாழும் மாணவர்களின் கல்வியை மேம்படுத்தும் நோக்கத்தோடு தமழீழ மாணவர் அமைப்பு பல உதவிகளை செய்து வருகிறது.

அந்த வகையில் மாணவர்களின் இரவு நேரகற்றல் நடவடிக்கையை மேம்படுத்த முதல் கட்டமாக மாணவர்களின் பயன்பாட்டுக்குப் பெற்றோல் மக்ஸ்கள் வழங்கப்பட்டுள்ளன. (ப-35)

## வவுனியாவில் நாளை ஹர்த்தால்

(வவுனியா)

வவுனியாவில் நாளை வியாழக்கிழமை பூரண ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. நேற்று வவுனியாவில் கூடிய தமிழ் மாணவர் ஒன்றியம் இந்த அழைப்பை விடுத்துள்ளது.

மாவீரர் தின நிகழ்வுகளின் போது வடக்கு - கிழக்கில் இடம்பெற்ற அசம்பாவிதங்கள் குறிப்பாக வேப்பங்குளம் பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் குறித்து தமது கண்டனத்தை வெளிப்படுத்தும் முகமாகவே இக் ஹர்த்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக தமிழ் மாணவர் ஒன்றியத் தலைவர் தெரிவித்தார். (ச-04)

## சொற்பொழிவு

(மருதங்கேணி)

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினால் வெள்ளிக்கிழமை தோறும் நடாத்தப்பட்டுவரும் வராந்த நிகழ்வில் நாளை வெள்ளிக்கிழமை காலை 10.30 மணியளவில் 'திருவாசகம் என்னும் தேன்' எனும் பொருள் பற்றி மதுரகவி காரை எம்.பி.அருளானந்தம் ஆசிரியர் சொற்பொழிவாற்றுவார். (ப-35)

★ ★ ★

(மருதங்கேணி)

ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் சுவாமி கோவில் பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் ஞாயிற்றுக்கிழமை தோறும் இடம்பெறும் ஆன்மீக சொற்பொழிவுத் தொடரில் எதிர்வரும் 5ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் 'அன்புநெறி' எனும் விடயம் பற்றிய சொற்பொழிவு இடம்பெறும். (ப-35)

## கொழும்பில் மூவர் கைது

(கொழும்பு)

பாராளுமன்றத்தின் அயலில் சந்தேகத்துக்கு இடமான முறையில் நடமாடிய தமிழ்ப்பெண் ஒருவரும், இளைஞர்கள் இருவரும் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் கைது செய்யப்பட்ட பெண் பாராளுமன்றத்துக்கு அருகில் உள்ள வீடொன்றில் வீட்டுப் பணிப்பெண்ணாகப் பணியாற்றி வருவதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, கைது செய்யப்பட்ட ஏனைய இருவரும் எதற்காக பாராளுமன்ற பிரதேசத்தில் நடமாடினார்கள் என்பது தொடர்பாக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (ற-4)

## ஹக்ரப் ஹொக்லன்ட் பதவி விலகுகிறார்?

(கொழும்பு)

போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவின் உதவித் தலைவர் ஹக்ரப் ஹொக்லன்ட் பதவி விலகவுள்ளார். எதிர்வரும் 8 ஆம் திகதி வரையுமே இவர் மேற்படி பதவியிலிருப்பார் என்றும் அதன் பின்னர் யக்மோவிங்கிள் என்பவரே கண்காணிப்புக்குழுவின் உதவித்தலைவராக இருப்பார் எனவும் கூறப்படுகிறது. (க)

## தையல் பயிற்சி

(கரவெட்டி)

கரவெட்டி பிரதேச செயலகத்தில், வடக்கு - கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தினால் தையல் பயிற்சிகள் நடத்தப்படவுள்ளன.

இத் தையல் பயிற்சி வகுப்புக்களில் பங்குபற்ற விரும்புவோர் தமது விண்ணப்பங்களை கல்வித்தகமையுடன் குறிப்பிட்டு கிராம சேவையாளரின் சிபார்சுடன் எதிர்வரும் 12 ஆம் திகதிக்கு முன் விண்ணப்பிக்குமாறு பிரதேச செயலாளர் சி.சத்தியசீலன் தெரிவித்துள்ளார். (க-108,9)

## ஆறுமுக நாவலரின் குருபூஜை தின விழா

(யாழ்ப்பாணம்)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் யாழ். மாவட்ட அலுவலகம் நடாத்தும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் குருபூஜைத் தினவிழா எதிர்வரும் 4 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4.00 மணிக்கு நல்லூர், நாவலர் மணி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில், பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ண ஐயர் 'நாவலர் சமயப் பணிகள்' எனும் தலைப்பில் சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளார். அவருடன் 'நாவலரின் சிந்தனையும் சைவத்தின் இன்றைய நிலையும்' எனும் தலைப்பில் சைவப்புலவர் ஏ.அனுஷாந்தனும் சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளார். மேலும் வில்லுப்பாட்டு, கலை நிகழ்ச்சிகளுடன் இன்னும் பல நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (க-7)

## திருமலையில் சடலம் மீட்பு

(திருகோணமலை)

திருகோணமலைப் பகுதியில் காணாமல் போன சுற்றுலா வழிகாட்டியின் சடலம் நேற்று முன்தினம் காலை கண்டெடுக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை துவரங்காடு பகுதிக்கு அருகில் உள்ள களப்பிலிருந்து இந்தச் சடலம் மீட்கப்பட்டதாக உப்புவெளிப் பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சம்பவத்தோடு தொடர்புடையவர் என்ற சந்தேகத்தின் பேரில் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சுற்றுலா வழிகாட்டி சென்ற மினிவான் துவரங்காடு சந்திக்கு அப்பால் தீவைக்கப்பட்ட நிலையில் கண்டுபிடிக்கப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (ற-4)

## கூட்டம்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை பிரதேச சுற்றுச் சூழல் பாதுகாப்புக் குழுக் கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு உதவி அரசாங்க அதிபர் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் உதவி அரசாங்க அதிபர் க.ஸ்ரீமோகன் தலைமையில் இடம்பெறவுள்ளது. (ப-75)

## வீதியை உயர்த்துமாறு மக்கள் கோரிக்கை

(சாவகச்சேரி)

கடந்த 3 வருடங்களுக்கு மேல் திருத்தப்படாது மோசமாகப் பாதிக்கப்பட்டிருந்த மறவன் புலவு மேற்கு செல்லும் 'கலையாபரணன் கோட்டை வீதி' தற்போது உலக வங்கியின் நிதி உதவியுடன் பிரதேச சபையினரால் திருத்தம் செய்யப்படுகிறது.

இதேவேளை, மழை காலத்தில் இவ் வீதி வெள்ளத்தால் மூடப்பட்டு போக்குவரத்திற்குப் பாவிக்க முடியாது போவதால் இவ் வீதியை ஒரு அடி (1') உயர்த்திப்போடுமாறு மறவன் புலோ மேற்கு சனசமூக நிலையத்தினர் அரச அதிபர் மற்றும் பிரதேச சபை செயலாளர் ஆகியோரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-29)

## சனசமூக நிலையம் திறந்து வைப்பு

(சாவகச்சேரி)

மறவன்புலோ மேற்கில் யப்பான் நிறுவனமான 'கரித்தாஸ்' நிறுவனத்தால் ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட சனசமூக நிலையம் அண்மையில் பொதுமக்களின் பாவனைக்குத் திறந்து விடப்பட்டுள்ளது.

தற்போது அக்கட்டடத்தில் பாலர் பாடசாலை இயங்கி வருகின்றது. (க-29)

## 140 இலங்கைப் பணிப் பெண்கள் ஜோர்தானில் நிர்க்கதி நிலையில்!

(கொழும்பு)

ஜோர்தானில் இலங்கையைச் சேர்ந்த சுமார் 140 பெண்கள் நிர்க்கதி நிலைக்கு உள்ளாகியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் உரிய தொழில் இன்றி முகாம் ஒன்றில் உரிய உணவுகள் இன்றி இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களை நாட்டுக்குத் திருப்பியழைக்கவோ அல்லது மீண்டும் வேலைவாய்ப்பைப் பெற்றுக்கொடுக்கவோ. அரசாங்கம் முனைப்பு எதனையும் மேற்கொள்ளவில்லை.

வெளிநாடுகளில் பணியாற்றும் பெண்களிடமிருந்து ஆண்டு ஒன்றுக்கு 13 ஆயிரத்து 645 கோடி ரூபா இலங்கைக்கு வருமானமாக வருகின்ற போதும், பணிப்பெண்கள் தொடர்பாக அரசாங்கம் இதுவரை எவ்வித நடவடிக்கையையும் மேற்கொள்ளாமை பலரதும் விமர்சனத்துக்கு உள்ளாகியுள்ளது. (ற-4)

## அரசியல் யாப்பு திருத்தப்படுவது தவிர்க்கப்பட முடியாத விடயம்

### பிரதமர் மஹிந்த

(கொழும்பு)

'தற்போதய அரசியல் யாப்பு திருத்தப்படுவது தவிர்க்கப்பட முடியாதது என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.



நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஒரு பிரதமரின் தலைமையில் ஸ்திரமான அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்குப் புதிய அரசியல் யாப்பு வழிவகுக்கும்.

இந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்குப் பாராளுமன்றத்தில் உள்ள அனைத்து உறுப்பினர்களும் ஆதரவு வழங்குவார்கள் எனத் தாம் எதிர்பார்ப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் இடம்பெற்ற குழுநிலை விவாதத்திலேயே பிரதமர் இந்தக் கருத்துக்களைத் தெரிவித்தார்.

ஆட்சிக்கு வந்த எமது அரசாங்கம் நாட்டில்நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்தவேண்டும் என்ற கடைப்பாட்டையே கொண்டுள்ளது.

நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்தியே தீரவேண்டும் என்ற குறிக்கோளை நோக்காகக் கொண்டே இவ்வரசாங்கம் ஆட்சிக்கு வந்தது.

அதனை அடைவதற்கு சகல முயற்சிகளையும் மேற்கொள்வதற்கும் தடைகளுக்கு எதிராகச் செயற்படவும் நாம் எந்த நேரத்திலும் தயாராகவுள்ளோம்.

இவ்வெற்றி இலக்கினை எவ்வளவு சீக்கிரம் அடைய முடியுமோ அவ்வளவு சீக்கிரம் அடைவதற்காகப் பாடுபடுவோம். தனது ஆட்சிக்காலத்தில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்தும் முயற்சிகளில் தீவிரமாக ஈடுபட்டு வந்துள்ளார் எனவும் பிரதமர் மேலும் தெரிவித்தார். (ற-4)

## மகனைக் கண்டுபிடித்துத் தருக

## மனோ மாஸ்டரின் தாயார் ம.உ.ஆ.குழுவில் முறைப்பாடு

(கொழும்பு)

கொழும்பில் காணாமல் போன தனது மகன் பற்றிய தகவலைப் பெற்றுத் தருமாறு ஈ.என்.டி.எல்.எப். ஸ்தாபகர் மனோமாஸ்ரர் எனப்படும் பா.இராஜரத்தினத்தின் தாயார் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவைக் கேட்டுள்ளார்.

மனிதஉரிமை ஆணைக் குழுவின் யாழ்.மாவட்ட அலுவலகத்தில் இது தொடர்பாக முறைப்பாடு ஒன்றை அவர் பதிவு செய்துள்ளார்.

தனது மகன் பாக்கியநாதன் இராஜரத்தினம், கருணா குழுவினரால் கடத்தப்பட்டுள்ளதாக ஊடகங்களில் வெளியான செய்திகளைச் சுட்டிக் காட்டி இந்த முறைப்பாட்டை அவர் பதிவு செய்துள்ளார்.

காணாமல் போன மனோ மாஸ்ரரின் இரண்டு பிள்ளைகளும், மனைவியும் சென்னை வடபழனியில் வசித்துவருவதாகத் தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ள அவர், தனது மகனது தகவல்களைப் பெற்றுத் தருமாறு கேட்டுள்ளார். (ற-4)

## உள்ளூராட்சி மன்றத்தின் போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களுக்கிடையே நடாத்தப்பட்ட 2003 ஆம் ஆண்டிற்கான முகாமைத்துவப்போட்டியின் மாநகர சபைகளுக்கிடையேயான போட்டியில் மட்டக்களப்பு மாநகரசபை முதலாவது இடத்தினையும் யாழ்ப்பாண மாநகரசபை இரண்டாவது இடத்தையும் பெற்றுள்ளது.

நகர சபைகளுக்கிடையேயான போட்டியில் வவுனியா நகரசபை முதலாவது இடத்தையும், இரண்டாவது இடத்தினை சாவகச்சேரி நகரசபையும், மூன்றாவது இடத்தினை வல்வெட்டித்துறை நகரசபையும் பெற்றுள்ளன.

பிரதேச சபைகளுக்கிடையேயான போட்டியில் சுன்னாகம் பிரதேச சபை முதலாவது இடத்தினைப் பெற்றுள்ளது. இரண்டாவது இடத்தினை வவுனியா தெற்கு தமிழ்ப் பிரதேச சபையும், திருகோணமலை பட்டிணச் சூழலும் பிரதேச சபையும் பெற்றுள்ளது.

மேற்படி போட்டி முடிவுகளை வடக்கு - கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் செல்வி தெ.விஜயலெட்சுமி சகல உள்ளூராட்சி மன்றங்களிற்கும் அறிவித்துள்ளார். (க-47)

# சம்பந்தனின் உரையால் பாராளுமன்றில் சர்ச்சை

(கொழும்பு)

நாடு பிளவுபடுவதைத் தடுக்க சமாதானப் பேச்சுவார்த்தைகள் உடனடியாக ஆரம்பிக்கப்பட வேண்டுமென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் இரா. சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனின் மாவீரர் தின உரை தொடர்பாக நேற்றுமுன்தினம் பாராளுமன்றத்தில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

சமாதானப் பேச்சுவார்த்தைகளின் போது விடுதலைப் புலிகளின் இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை யோசனையில் ஏதாவது முரண்பாடு இருக்குமானால் அதனை பேச்சுவார்த்தை மேசையில் பேசித்தீர்க்கலாம்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் யோசனையானது, பண்டா- செல்வா ஒப்பந்தம் மற்றும் டட்லி- செல்வா ஒப்பந்தம் ஆகியவற்றின் இணக்கப்பாடுகளுக்கு அப்பால் செல்ல வில்லை எனச் சுட்டிக்காட்டினார்.

இந்த நிலையில், சம்பந்தனின் உரைக்கு ஜாதிகஹெல உறுமய பாராளுமன்ற உறுப்பினர் அதுரலிய ரத்ன தேரர் கடும் எதிர்ப்பைத் தெரிவித்தார்.

ஒழுங்குப் பிரச்சினை ஒன்றை எழுப்பியே அவர் இந்த எதிர்ப்பைத் தெரிவித்தார்.

அரசியல் யாப்பிற்கு அமைய சத்தியப் பிரமாணம் செய்த பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் வேறொரு இராஜ்ஜியம் தொடர்பாகப் பேசுவதற்கு அனுமதி அளிக்க முடியுமா? என்று ஒழுங்குப் பிரச்சினை ஒன்றை எழுப்பிய அதுரலிய ரத்ன தேரர், சபாநாயகரிடம் இது குறித்து வினாவினார்.

இதேவேளை, இலங்கையின் வரலாற்றில் தமிழ் இராஜ்ஜியங்கள் இருந்ததாக சாட்சியங்கள் எதுமில்லை. அவ்வாறு சாட்சியங்கள் இருக்குமாக இருந்தால் அதனைப் பாராளுமன்ற தெரிவுக்குழுவுக்கு முன்பாக நிரூபிக்க முடியும்.

நாட்டிற்கு பாதுகாப்பு அச்சுறுத்தல் ஏற்படுமானால் அதனைக் கட்டுப்படுத்த நிறைவேற்று அதிகாரம் ஜனாதிபதிக்கு உண்டு.

அரசியல் யாப்பை விமர்ச்சிக்கும் அத்தகைய விடயங்களை பாராளுமன்றத்தில் பேச முடியாது என அமைச்சர் தினேஷ் குணவர்த்தனவும், ஜே.வி.பியின் பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்சவும் கூட்டாகக் கருத்துத் தெரிவித்தனர்.

எது எவ்வாறாயினும், பாராளுமன்ற வரப்பிரசாதங்கள் நெறிமுறைகளுக்கு அமைய, பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் தனது கருத்துக்களைத் தெரிவிக்க முடியும் என சபாநாயகர் டபிள்யூ. ஜே.எம். லொக்குபண்டார தெரிவித்தார்.

எனினும், அரசியல் யாப்பிற்கு முரணான கருத்துக்கள் எதுவும் வெளியிடப்பட்டால் ஹன்ஷாட் பதிவிலிருந்து அது நீக்கப்படும் என்று சபாநாயகர் குறிப்பிட்டார்.

இவ்விடயம் தொடர்பாக கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் ஆராய எண்ணியுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (ற-4)

## காரைநகர் மேற்கு வீதியூடான பஸ்சேவை இடைநிறுத்தம் மக்கள் பெரும் அவலம்!

(காரைநகர்)

காரைநகர் மேற்கு வீதியூடான வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பஸ்சேவை நிறுத்தப்பட்டதனால் பொதுமக்கள் பலதரப்பட்ட இன்னல்களை அடைவதாக கவலை தெரிவிக்கின்றனர்.

அண்மையில் பெய்த கடும் மழை காரணமாக காரைநகர் மேற்கு வீதியின் பல பகுதிகளில் பெரும் வெள்ளம் ஏற்பட்டது.

இதன் காரணமாக காரைநகர் மேற்கு வீதிக்கான பஸ் சேவையை வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் காரைநகர் சாலையினர் இடை நிறுத்தம் செய்தனர்.

இதனால் காரைநகர் மேற்கு வீதியில் வசிக்கும் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பொதுமக்கள் ஒழுங்கான பாதுகாப்பான போக்குவரதின்றி அல்லல்படுவதோடு, அரச அலுவலகங்களில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள், ஆசிரியர்களின் வரவில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதுடன், பொதுமக்களின் இயல்பு வாழ்க்கையும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

காரைநகர் மேற்கு வீதியில் 5 கிலோ மீற்றர் நீளமான இவ் வீதியால் போக்குவரத்து சேவை தடைப்பட்டதனால் வைத்திய சாலைக்கு செல்லும் நோயாளர்கள் கூட பல்வேறு இன்னல்களை எதிர்நோக்குகின்றனர். போக்குவரத்து சேவையின் காரைநகர் சாலையினர் தமது சேவையினை மீளவும் ஆரம்பிக்காதது குறித்து பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில் இவ்வீதியில் சேவையில் ஈடுபடும் தனியார் பேருந்துகள் அளவுக்கு அதிகமாகப் பயணிகளை ஏற்றி சேவையில் ஈடுபடுவதனால் வயோதிபர், சிறுவர்கள் பயணிக்க முடியாத நிலைமையுள்ளது.

பொதுமக்களின் அவல நிலைமையை கருத்தில் கொண்டு சேவையாற்ற முன்வராத பொறுப்பான அதிகாரிகள் கண்டும் காணாததுபோன்று இருப்பது குறித்து பொதுமக்கள் தரப்பில் பெரும் அதிருப்தி வெளியிடப்பட்டுள்ளது. (க-246)

## அறிவமுது பதிப்பகத்தின் நூல் வெளியீட்டு விழா

(கிளிநொச்சி)

அறிவமுது பதிப்பகத்தின் புதிய நூல்கள் வெளியீட்டு விழா மற்றும் அறிமுக விழா இன்று வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் மாலை 3.30க்கு நடைபெறும் இந்நிகழ்வில், தமிழ் நாட்டிலிருந்து தமிழீழத்திற்கு வருகை தந்துள்ள விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பின் பொதுச்செயலாளர் தொல். திருமாவளவன் சிறப்புரையாற்றவுள்ளார். (ற-4)

## மிதிவெடிகள் மாயம்

(திருகோணமலை)

திருகோணமலை உப்புவெளி பொலிஸ் நிலையத்தில் இருந்து 6 மிதிவெடிகள் மர்மான முறையில் காணாமல் போயுள்ளன.

அப்பகுதியில் மிதிவெடி அகற்றும் பிரிவினரால் அகற்றப்பட்டு செயலிழக்கச் செய்வதற்காக 12 மிதிவெடிகள் அங்கு வைக்கப்பட்டிருந்தன. அவற்றில் 6 மிதிவெடிகள் காணாமல் போயுள்ளன.

இவற்றில் வெடிபொருட்கள் இருப்பதால் அப்பிரதேச மீனவர்களுக்கு இவை திருட்டுத்தனமாக விற்கப்பட்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் தெரிவித்தனர். (ற)


## விவாத அரங்கு -7

விடயம்

தனியார் கல்வி நிறுவனங்கள் மாணவர்களின் கல்வியை சீர்படுத்துகின்றனவா? சீரழிக்கின்றனவா?

உங்கள் வாதங்களை எழுதி அனுப்பி வையுங்கள்

அனுப்பவேண்டிய முகவரி

விவாத அரங்கு, வலம்புரி,

இல.15, வெள்ளாந்தெரு,

யாழ்ப்பாணம்.


## வாள்வெட்டிற்கு இலக்கான இராணுவ சிப்பாய் மரணம்

யாழ்ப்பாணம் நுணாவிலில் கடந்த வியாழக்கிழமை இரவு இனந்தெரியாத நபர்களின் வாள் வெட்டிற்கு இலக்கான இராணுவ புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த சிப்பாய்களில் ஒருவர் நேற்று முன்தினமிரவு மரணமானார்.

குருநாகல் சியம்பல கஸ்வெவவைச் சேர்ந்த லான்ஸ் கோப்ரல் எம்.ரூபசிங்க கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த சமயம் நேற்றுமுன்தினமிரவு மரணமானார்.

வாள் வெட்டிற்கு இலக்கான இரண்டாவது இராணுவ புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த சிப்பாய் தொடர்ந்து வைத்திய சாலையில் சிகிச்சை பெற்றுவருகின்றார். (க-4)

## அன்பளிப்பு

கனடாவில் வசித்து வரும் கரவெட்டியை பிறப்பிடமாக கொண்ட கந்தசாமி தேவகுமார் நெல்லியடியில் உள்ள ஸ்ரீபரமானந்தா சேவாச்சிரமத்திற்கு 21 அங்குல வர்ண தொலைக்காட்சிப் பெட்டி ஒன்றை அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

இதேவேளை இலங்கை வங்கியின் பருத்தித்துறை முகாமையாளர் ஸ்ரீபரமானந்தா சேவாச்சிரமத்திற்கு சிங்கர்ரகத் தையல் இயந்திரம் ஒன்றை அன்பளிப்பாக வழங்கியுள்ளார். (க-108,9)

## முச்சக்கரவண்டி உரிமையாளர்களுக்கு 'கிரடிட்கார்ட்' மூலம் எரிபொருள் மானியம்

(கொழும்பு)

முச்சக்கர வண்டி உரிமையாளர்களுக்கு எரிபொருள் மானியமாக 'கிரடிட் கார்ட்' வழங்கும் திட்டமொன்றை அரசு நடைமுறைப்படுத்தவுள்ளதாக திறைசேரியின் செயலாளர் பி.பி.ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

தற்போதைய எரிபொருள் விலை, எதிர்வரும் காலங்களில் அதிகரிக்கும் பட்சத்தில், அதிகரிக்கப்படும் அத்தொகைமானியமாக வழங்கப்படவுள்ளது.

ஒரு மாதத்திற்கு தேவையான எரிபொருளின் அளவு மதிப்பிடப்பட்டு அதற்குரிய மானியம் 'கிரடிட் கார்ட்' மூலம் வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

முச்சக்கர வண்டி சாரதிகள் இக் கிரடிட் கார்ட்டைப் பயன்படுத்தி எரிபொருளை பெற்றுக் கொள்ளலாம்.

மக்கள் வங்கிக் கிளைகள் மூலம் இக் கிரடிட்காட் வழங்கப்படவுள்ளதாகவும், எரிபொருள் விலை அதிகரிப்பு ஏற்படும் வேளையில் முச்சக்கர வண்டி உரிமையாளர்கள் தமது ஆவணங்களைச் சமர்ப்பித்து 'கிரடிட் கார்ட்' ஐ பெற்றுக் கொள்ளலாம் எனவும் திறைசேரி செயலாளர் மேலும் தெரிவித்துள்ளார். (க-7)

### பாவனைக்கு உதவாத பொருட்கள் ஏலத்தில்

(யாழ்ப்பாணம்)

யாழ்.செயலகத்தில் உள்ள பாவனைக்கு உதவாத பொருட்கள் கடந்த திங்கட்கிழமை யாழ் செயலகத்தால் ஏலத்தில் விடப்பட்டன.

யாழ். நூலகத்தில் பாவனைக்கு உதவாது இருந்த வலைகள், பழைய சீற்றுகள் மற்றும் பழைய தளபாடங்கள் போன்றனவே ஏலத்தில் விடப்பட்டன. (ற-19)

## தபால் பொதிகளில் மோசடி; எண்மர் பொலிஸாரால் கைது

(கொழும்பு)

கொழும்பில் உள்ள மத்திய தபால் பரிவர்த்தனை மையத்தில் வெளிநாடுகளில் இருந்து வரும் தபால் பொதிகளை திருடும் 8 பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கடந்த செவ்வாயன்று இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது. இவர்களில் மத்திய தபால் பரிவர்த்தனை மையத்தில் பணியாற்றும் இரண்டு தபால் அதிபர்களும் அடங்குவர்.

ஏற்கனவே இது தொடர்பில் நால்வர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். மேலும் இருவர் தற்போது கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் வெளிநாடுகளில் இருந்து வரும் தபால் பொதிகளில் உள்ள பொருட்களை திருடி வருவதாக தபால்மா அதிபரிடம் இருந்து கிடைத்த முறைப்பாட்டை அடுத்தே கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களிடம் இருந்து கையடக்கத் தொலைபேசிகள் உட்பட்ட பல பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

விசாரணைகள் தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றன. (ற)

## பிரான்ஸில் இடம்பெற்ற மாவீரர் தின நிகழ்வு





(பிரான்ஸ்)

பிரான்ஸில் மாவீரர் நாள் நிகழ்வுகள் பரிஸின் புறநகர்ப் பகுதியான மாசிப்பலசோ எனுமிடத்தில் அமைந்த லீ கிரான்ட் டோம் அரங்கில் கடந்த ஞாயிற்றுக்கிழமை பி.ப 2.00 மணிக்கு சிறப்பாக நடைபெற்றன.

நிகழ்வில் பொதுச்சுடரை பிரெஞ்சுப் பணியகப் பிரதிநிதி ரஞ்சன் ஏற்ற,

தமிழீழத் தேசியக் கொடியை வன்னி மாவட்டக் கடற் புலிகளின் கட்டளைத் தளபதி விநாயகம் ஏற்றி வைத்தார். ஈகச்சுடரை தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரெஞ்சுக் கிளைப் பொறுப்பாளர் பரிதி ஏற்றி வைத்தார்.

அதனைத்தொடர்ந்து பெருந்திரளான மக்கள் மாவீரர் நினைவாக அமைக்கப்பட்ட நினைவுத் தூபியில் மலர்கள் வைத்து மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தினர்.

அன்றய மாவீரர்நாள் நிகழ்விற்காக கடற்புலிகளின் கலம் போன்று பிரமாண்டமாக வடிவமைக்கப்பட்ட மேடையில் கலை நிகழ்ச்சிகள் இடம் பெற்றன. எழுச்சிக்கானங்கள், நாட்டுக்கூத்து, நாடகம், மற்றும் மாவீரர் நாள் நிறைவுப் போட்டிகளில் பங்குபற்றி வெற்றி பெற்றவர்களுக்கான பதக்கங்கள், சான்றிதழ்கள் வழங்கி ஊக்குவிக்கப்பட்டது.

இறுதி நிகழ்வாக வன்னி மாவட்ட கடற்புலிகளின் கட்டளைத் தளபதி விநாயகம் சிறப்புரையாற்றினார். (ற-4)




## மழைக்காலம்

மழைக் காலங்களில் பழைய பெட்ஷீட்டை தேவையான செவ்வக வடிவங்களில் வெட்டிக்கொண்டு ஒன்றின மேல ஒன்றாக அடுக்காக வைத்து அழுத்தமாகத் தையல் போட்



## சில அறிவுரைகள்...

டால் அவற்றை கால் மிதியடியாகப் பயன்படுத்தலாம்.

*.படுக்கையறையில் கட்டிலின அருகே ஒரு துணி மிதியடி போட்டு வையுங்கள். படுக்கையில் ஏறும்முன் கால்களை அதிலே துடைத்துக்கொணடால படுக்கை சுத்தமாக இருக்கும.

* பொதுவாகவே துணிகளை அன்றன்றைக்குத் துவைப்பது நல்லது. இல்லையெனில் ஈரப்பதம் பட்டு கறுப்புப் புள்ளிப் புள்ளியாக பங்கஸ் கிருமிகள் தொற்றிக்கொள்ளும்.

* மழை நாட்களில் துணிகளில் படும் சேறும் சகதியும் மாறாத கறைகளாகிவிடும். அதனால் வெளிர் நிறங்களைத் தவிர்த்துவிட்டு கடும் வர்ண ஆடைகளை அணியுங்கள்.

*.கஞ்சி போட்ட சேலை, ஜீன்ஸ், ஷோட் போன்ற முரட்டுத் துணிகளுக்குப் பதில் சுலபமாக உலரும் துணிகளினாலான ஆடைகளை அணியுங்கள்.

*ஃமின்விசிறிக் காற்றிலேயே துணிகளைக் காயவைக்க வேண்டியிருக்கிறது. என்பதால் கடைசி முறையாக அலசும்போது நன்கு கொதிக்கும் வெந்நீரில் அமுக்கிக் காயவைப்பது நல்லது. பங்கஸ் கிருமிகள் இருந்தால் இறந்துவிடும். உள்ளாடைகளை மட்டுமாவது வெந்நீரில் அமுக்கியெடுக்கவும்.

*.ஈரப்பதமான சூழ்நிலையில் வீட்டில் எல்லாப் பொருட்களிலுமே பாசி படரலாம். தரையோடு இருக்கும் பொருட்களில் கறையான் வரவும் கூடும். அதனால் மழைக்காலத்தில் வீட்டிலிருக்கும் பொருட்களை அவ்வப்போது துடைத்து இடம மாற்றி வையுங்கள்.

*.மழைக்காலத்தில் அடிக்கடி மின்சாரம் தடைப்படலாம். வீட்டின் முக்கியமான இரண்டு மூன்று இடங்களில் தீப்பெட்டியையும் மெழு குவர்த்தியையும் நிரந்தரமாக வையுங்கள்.

* மழைக்காலம் ஆரம்பிப்பதற்கு முன்பே கூரைகளிலும், வீட்டைச் சுற்றிலும் குவிந்திருக்கும் சருகுகளையும் குப்பையையும் கூட்டிச் சுத்தப்படுத்தி வையுங்கள். நுளம்பு உற்த்தி ஆவதைத் தடுக்கலாம்.

## அயல் வீட்டாருடன் நட்பு

சமாதானமும் ஆனந்தமும் நிறைந்த வாழ்க்கைக்கு நம் அயல்வீட்டாருடன சுமுகமான உறவு இருக்க வேண்டும். பககதது வீட்டாருடன் பகையுடன் இருநதால அது .நமக்குப் பல பிரச்சினைகளைத் தோற்றுவிக்கும். பக்கத்து வீட்டாருடன் நெருக்கம் பேண சில யோசனைகள்.



அயல் வீட்டாரிடம் பணமோ வேறு பொருட்களோ கடன் வாங்காதீர்கள். என்ன தேவை ஏற்பட்டாலும நாம் கடன கேடகாமல் இருப்பது நிலையான நட்பிற்கு உதவும். அயல் வீட்டுக் குழந்தையுடன் உங்கள் குழந்தைகள் சண்டைபோட்டால் அதல் பெரியவர்களான நீங்கள் தலையிடாதீர்கள். அதனால் பிரச்சனை பெரிதாகுமே தவிர தீர்வு ஏற்படாது.

உங்கள் குழந்தைகளுக்கு பிற குழந்தைகளுடன் நட்பாகப் பழகக் கற்றுக் கொடுங்கள். அவர்களது சண்டைகளையும், பிரச்சினைகளையும் அவர்களே தீர்த்துக்கொள்வார்கள்.

## பாராட்டுவது எப்படி?

அயல்வீட்டாருடன் அதிக நெருக்கமாகப் பழக அவர்களின் தனிப்பட்ட குடும்பப் பிரச்சினைகளில் தலையிடாதீர்கள். தங்கள் பிரச்சினைகளை உங்களிடம் மனம் திறந்து சொன்னால் மடடுமே உங்களால் முடிநத உதவியை அவர்களுக்குச் செய்யுங்கள்.

பக்கத்து வீட்டாருடன் நீயா? நானா? என்பது போன்ற போடடிகள ஏற்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

பக்கத்து வீட்டில் ஏதாவது வருத்தத்துக்குரிய சம்பவம் நிகழ்ந்தால் முதலில் சென்று விசாரித்து ஆறுதல் சொல்லவேண்டும். அதே போல அயல் வீட்டாருக்கு நல்லது நடந்தால் அதில் கலந்துகொண்டு வாழ்த்துச் சொல்லவும் தயங்க வேண்டாம். பக்கத்து வீட்டாருடன் கருத்துமோதல் இல்லையேல் பிரச்சினை ஏற்பட்டால் சமாதானமாகப் பேசி முடிக்கவேண்டும்.

அயல் வீட்டாருக்குத தொநதரவு கொடுககும் வகையில் நடந்து கொள்ளக் கூடாது. பிள்ளைகளின் கூச்சல், ரேடியோவை அலற விடுவது, நாயைக் கட்டிப்போட்டு இரவெல்லாம குரைக்க விடுவது போன்றவற்றைக் குறிப்பிட்டுச் சொல்லலாம்.

மேலும், பக்கத்து வீட்டாருடன் இன்னொரு அண்டை வீட்டாரைப்பற்றி குறை சொல்லவேண்டாம. உங்கள் மீதான மதிப்புக் குறைந்துவிட வாய்ப்பு உண்டு.

தொலைவிலுள்ள நண்பனைவிட அருகில் இருக்கும் எதிரி ஆபத்தில் உதவலாம். எனவே எதிரிகளை நண்பர்களாக ஆக்கமுடியாவிட்டாலும் குறைந்த பட்சம் மோதல் இல்லாத சூழலைப் பேணுவதே நல்லது.

அயல் வீட்டு நட்புறவில் அகங்காரமும் சுயநலமும் வேணடாம். பண்டிகைக் காலங்களில் உங்கள் மகிழ்ச்சியை அவர்களுடன் பகர்ந்து கொள்ளுங்கள்.

எப்போது தெருவில் கண்டாலும் ஒரு புன்னகை.. ஒரு விசாரிப்பு...

நீங்கள் நிச்சயம் அயலவரை நேசிப்பவர் தான்.

* * *

## குழந்தைகளை பள்ளிக்கு அனுப்பும்போது

குழந்தைகளுக்கு ஒரு வாரத்திற்கு காலையிலும் மதிய உணவாகவும் என்ன கொடுத்தனுப்பலாம் என்பதைத் தீர்மானித்து அதன்படி ஒரு உணவுப் பட்டியல் தயாரித்து வைத்துக் கொள்ளுங்கள். இதுவும் முடியாவிட்டால் முதல்நாள் மாலை வீட்டில் ஓய்வாக இருக்கும் போது மறுநாள் என்ன உணவு தயாரிக்கலாம் என்பது பற்றி சிந்தியுங்கள்.

முன்னரே தீர்மானித்து வைத்திருந்தால் ஒவ்வொரு நாள் இரவும் படுக்கப்போகும்போது காலை மற்றும் மதியநேர சமையலுக்குத் தேவையானவற்றை சமையலறையில் தயாராக எடுத்து வையுஙகள். 15 அல்லது 20 நிமிடங்களுக்கு முன்கூட்டியே எழுந்து விட்டால் காலை நேர உணவு தயாரிப்பதில் எந்தப் பதற்றமும் ஏற்படாது.



ஒவ்வொரு வாரமும் உணவு வகையை மாற்றி வந்தால் குழந்தைகள் விரும்பி ஆர்வமாகச் சாப்பிடுவார்கள்.

பல பெண்கள் காலையில் எதையாவது சாப்பிடக் கொடுத்து அவசர அவசரமாக்க் குழந்தைகளை அனுப்பினால் போதும் என்று நினைக்கிறார்கள். இது தவறு. காலையில் குழந்தைகளுக்கு மிகவும் சத்தான ஆகாரம் தேவை என்பதை நினைவில் வையுங்கள்.

ஏனெனில் இரவு இடைவெளிக்குப் பின்தான் குழந்தைகள் சாப்பிடுகிறார்கள். உடல்சோர்வும் அப்போது இருக்கும்.

தவிர, காலையில் சத்தான ஆகாரம் கொடுக்கவில்லையென்றால் அதனால் வகுப்பறையில் ஆர்வக் குறைவு ஏற்படுவதற்கு வாய்ப்பு உண்டு. எனவே காலையில்தான் சத்தான ஆகாரம் அவசியம். அது அவர் களுக்குப் புத்துணர்ச்சி தருவதாக இருக்கவேண்டும்.

## சமைத்துச் சுவைப்போம்

### சில்லி சிக்கன்

**தேவையான பொருட்கள்**




| | |
|---|---|
| கோழி | -500g (முள்நீக்கியது) |
| பெரிய வெங்காயம் | -250g |
| செத்தல்மிளகாய் | -100g |
| பூண்டு | -8 |
| தக்காளி சோஸ் | -6.மே.கரண்டி |
| சோயா சோஸ் | -1.மே.கரண்டி |
| சோள மா | -2.தே.கரண்டி |
| வினாகிரி | -1.தே.கரண்டி |
| சீனி,உப்பு, எண்ணெய் | -அளவுக்கு |

**செய்முறை:-**

இறைச்சியை சிறிய சதுரங்களாக வெட்டிக் கொள்ளவும். பின்பு அதற்கு சிறிதளவு உப்பு, மஞ்சள் சேர்த்து தண்ணீர் விட்டு அவிய விடவும். அவிந்ததும் வினாகிரி, சோயா சோஸ், சீனி சேர்த்து பொன்னிறமாகப் பொரித்துக்கொள்ளவும். பின்பு பொடியாக நறுக்கிய வெங்காயத்தை சிறிதளவு உப்பு சேர்த்து இறைச்சி பொரித்த எண்ணெயிலேயே பொரித்தெடுக்கவும்., பின் தாச்சியை அடுப்பில் வைத்து மெல்லிய சூட்டில் சிறிதளவு எண்ணெய் சேர்தது அதில் நறுக்கிய பு,ண்டைச் சேர்க்கவும். பு,ண்டுவாசனை வரும்போது தக்காளி சோஸை சேர்த்து தேவையெனில் சிறிதளவு தண்ணீர் ஊற்றி கொதிக்கவிடவும். பின் அதில் துண்டு மிளக்ாய்களை வினாகிரி, சோயா சோஸ் சேர்த்து கலக்கவும். அதனுடன் பொரித்து வைத்த இறைச்சியைச் சேர்க்கவும். பின் சிறிதளவு நீரில் சோளமாவைக் கரைத்து அதையும் இக்கலவையுடன் சேர்க்கவும். சேர்வைகள் எல்லாவற்றையும் நன்கு கலந்தபின் பொரித்துவைத்துள்ள வெங்காயத்தையும் சேர்த்துக் கிளறி எடுத்துப் பரிமாறலாம்.

# ஜெயேந்திரர் - உஷா தொடர்பு

சங்கரராமன் கொலை வழக்கில் ஜெயேந்திரர் கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து ஜெயயேந்திரர் பற்றி நாளுக்கு நாள் பல திடுக்கிடும் தகவல்கள் வெளியாகிக் கொண்டிருக்கின்றன.



வில்லை என்றார்.

## பொலிஸ் விசாரணை

உஷாவிடம் தனி அறையில் பொலிஸ் அதிகாரிகள் விசாரணை நடத்தினார்கள். அந்த விசாரணையின் போது சங்கர மடத்துக்கும் அவருக்கும் உள்ள தொடர்பு, அவருக்கு ஜெயேந்திரர் அளித்த பண உதவிகள் ஆகியன பற்றியும் வீடு வாங்கிக்கொடுத்த விவரம் பற்றியும் இன்னும் என்னென்ன உதவிகள் ஜெயேந்திரர் செய்தார் என்பது பற்றியும் மாறி மாறி பொலிஸ் அதிகாரிகள் கேள்வி கேட்டு பதிலைப் பெற்றனர்.

மாலை 5.45மணி ஆனதால் பொலிஸ் நிலையத்தில் பெண்களை வைத்து விசாரிக்கக் கூடாது என்ற சட்டத்தின் கீழ் அவரை வழக்கறிஞர் சுதா ராமலிங்கத்திடம் ஒப்படைத்தனர். பொலிஸ் விசாரணைக்குப் பின்னர் வெளியே வந்த உஷா 5.55மணிக்கு நிருபர்களுக்குப் பேட்டியளித்தார்.

## உஷா பேட்டி

நான் சாதாரண குடும்பத்தைச் சேர்ந்தவள். கடந்த 1979ஆம் ஆண்டு முதல் புற்றுநோயால் பாதிக்கப்பட்டு சிகிச்சைபெற்று வருகிறேன். பொலிஸ் விசாரணைக்காக தற்போது வந்துள்ளேன். என்மீது கூறப்பட்டுள்ள புகார்கள் மிகுந்த மனவேதனையை அளிக்கின்றது. நான் ஒரு குற்றமும் செய்யவில்லை. எனது கணவர் என்னைவிட்டுப் பிரிந்து வாழ்கிறார்.

கடந்த 1995முதல் சங்கர மடத்திற்குச்சென்று வருகிறேன். எனது உடல் நிலை குணமாகவேண்டியே ஜெயேந்திரரிடம் ஆசிபெற மடத்திற்குச் சென்றேன். அவர்தான் எப்போதும் எனக்குக் குரு. நான் சிஷ்யை. மருத்துவ சிகிச்சை பெறுவதற்காகவே மடத்தின் சார்பில் எனக்கு உதவிகள் செய்யப்பட்டன. வேறு எந்தப் பண உதவியும் வீடும் கட்டித்தரவில்லை. இவ்வாறு உஷா கூறினார்.

மேலும் செல்போனில் அவருடன் ஜெயேந்திரர்

மாகும்.

உஷா கடந்த மாதம் 23ஆம் திகதி தனது வீட்டைக் காலிசெய்துள்ளார். டி.எண் 45வி 4273 என்ற எண் கொண்ட லொறியில் பொருட்கள் ஏற்றிச் செல்லப்பட்டது. மேலும் டி.எண் 45 ஏஏ 4024 என்ற எண் கொண்ட காரில் உஷாவும் அவரது தாயும் சென்றுள்ளனர். அந்தக் குடியிருப்பில் இருந்து லொறியும் காரும் செல்வதற்கு முன் செக்ருட்டி சந்தேகத்



தின் பேரில் வாகனங்களின் நம்பர்களைக் குறித்து வைத்துள்ளார்.

தற்போது அந்த லொறியும் காரும் எங்கு சென்றுள்ளன. எந்த ஊரில் இருக்கின்றன? என்று பொலிஸார் பல கோணங்களில் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர். மேலும் உஷாவுக்கு வீடு ஏற்பாடு செய்துகொடுத்த புறோக்கர் யார்? அவர் எந்த ஊரைச் சேர்ந்தவர். திருவரங்கத்தைச் சேர்ந்தவரா? அவர் தற்போது எங்கு உள்ளார்?. அவரைப்பிடித்தால் பல உண்மைத் தகவல்கள் கிடைக்கும் என்ற எண்ணத்தில் பொலிஸார் அவரை வலைவீசித்தேடி வருகின்றனர்.

## பணம் அனுப்பும் நபர் யார்?

உஷாவுக்கு அடிக்கடி மணியோடர் மூலம் ஒவ்வொரு மாதமும் 20ஆயிரம் ரூபா வரை வந்துள்ளது. அந்தப் பணம் எங்கிருந்து அனுப்பப்பட்டது? என்பதைபற்றிய விபரம் உடனடியாகத் தெரியவில்லை. இவ்வளவு பெரிய தொகை ஒவ்வொரு மாதமும் உஷாவுக்கு அனுப்பியது யார்? எதற்காக அனுப்பினார்கள் என்பது மர்மாக உள்ளது. இதுதொடர்பாக பொலிஸார் தீவிரமாக விசாரணை நடத்தி வருகின்றனர்.

உஷா சக்கரா அப்பார்ட் மெண்டில் குடியேறிய போது 15ஆயிரம் ரூபா டிபாசிற் செலுத்தியுள்ளார். பொலிஸாரின் சந்தேகப்பார்வை தன்மீது பதிவதை உணர்ந்த உஷா டிபாசிற் பணத்தைக்கூடத் திரும்ப

# பொலிஸ் புலனாய்வில் திடுக்கிடும் தகவல்கள்

இந்நிலையில், ஜெயேந்திரர் பெண்களுடன் தகாத செயல்களில் ஈடுபடும் காமுகன் என பிரபல எழுத்தாளர் அனுராதா ரமணன் தெரிவித்திருந்தார். இதற்கு அடுத்த படியாக தற்போது உஷா எனும் பெண்ணுடன் ஜெயேந்திரருக்குத் தொடர்பு உண்டு என்று தகவல்கள் வெளிவந்துள்ளன.

## நீதிமன்ற விசாரணை

சங்கரராமன் கொலை வழக்கில் ஜெயேந்திரர் கைதுசெய்யப்பட்ட பின்பு பிணையில் விடுதலை செய்யக் கோரி சென்னை உயர் நீதிமன்றத்தில் அவர் மனுத்தாக்கல் செய்தார். கடந்த திங்கட்கிழமை சென்னை உயர் நீதிமன்றத்தில் விசாரணை நடந்தது.

விசாரணையின் போது அரசு தரப்பில் ஸ்ரீரங்கத்தைச் சேர்ந்த உஷா என்ற பெண்ணுடன் ஜெயேந்திரர் இரகசியத்தொடர்பு வைத்திருந்தார் என்றும் அவருடன் தினமும் அதிகாலை ஜெயேந்திரர் போனில் பேசுவார். 900 பல்ஸ் யூனிற் பேசியதற்கான ஆதாரங்கள் இருக்கின்றன என்றும் ஜெயேந்திரர் உஷாவுக்கு வீடு வாங்கிக் கொடுத்தார் என்றும் அதோடு ஐ.சி.ஐ.சி.ஐ.வங்கியில் கணிசமான அளவுக்குப் பணமும் வைப்புச் செய்துள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது. உஷா தலைமறைவாகிவிட்டார் என கோட்டில் அப்போது தெரிவித்தனர்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் பகல் 12.45மணிக்கு உஷா அவரது வழக்கறிஞர் சுதா ராமலிங்கத்துடன் காஞ்சிபுரம் சென்றார். அங்கு மாவட்ட பொலிஸ் சுப்பிரண்டு அலுவலகத்துக்குச் சென்றார். பின்னர் அங்கு தனிப்படைப் பொலிஸ் உஷாவை மட்டும் தனிமையில் விசாரிக்க அழைத்துச் சென்றனர். மாவட்ட மகளிர் காவல் நிலைய கட்டடத்தில் உஷாவை வைத்துத் தனிப்படை கூடுதல் எஸ்.பி.சத்தியநாராயணன் (கடலூர்), பவானீஸ்வரி, பெண் இன்ஸ்பெக்டர்கள் விட்டோபாய், சரசுவதி ஆகியோர் விசாரணை நடத்தினர்.

இந்த விசாரணை மாலை 5.45மணிக்கு முடிந்தது. பின்னர் மாலையில் உஷாவின் வழக்கறிஞர் சுதா ராமலிங்கம் நிருபர்களிடம் கூறியதாவது,

அரசு தரப்பில் உஷா பற்றி சென்னை உயர்நீதி மன்றத்தில் சில தகவல்கள் தெரிவிக்கப்பட்டன. அவர் எங்கும் தலைமறைவாகிவிடவில்லை. கடந்த அக்டோபர் மாதம் 12ஆம் திகதி ஸ்ரீரங்கத்தில் வைத்து அவரை பொலிஸார் விசாரித்தனர். பிறகு வீட்டைக் காலி செய்துவிட்டு சென்னையில் உள்ள உறவினர் வீட்டில் உஷா தங்கிவிட்டார். அவரைப்பற்றி வெளியாகியுள்ள செய்திகள் வக்கிரத்தனமாக உள்ளன.

உஷா புற்றுநோயால் பாதிக்கப்பட்டு கடந்த 1979ஆம் ஆண்டு முதல் மருத்துவ சிகிச்சை பெற்றுவருகிறார். கடந்த 1994ஆம் ஆண்டு அவருக்குத் திருமணம் நடந்தது. அவரது கணவர் பெயர் நாராயணன். மடத்துக்கு உஷாவை அவர்தான் அறிமுகம் செய்து வைத்தார். சில கருத்து வேறுபாடுகளால் 2000ஆம் ஆண்டுமுதல் உஷாவின் கணவர் அவரிடமிருந்து பிரிந்து வாழ்கிறார்.

சங்கர மடத்தின் தீவிர பக்தை உஷா. உடல் நலக்குறைவால் பாதிக்கப்பட்ட உஷாவுக்கு சங்கர மடம் பண உதவி வழங்கியது. மற்றபடி வேறு எந்தவித தொடர்பும் இல்லை. எங்கள் சார்பில் எந்தக் குற்றமும் இல்லை. இதை வெளிப்படுத்தவே நாங்கள் பொலிஸார் முன் விசாரணைக்கு ஆஜராகியுள்ளோம். சிலர் சொல்வதுபோல் சரணடைய




பேசியது தொடர்பான புகார்கள் குறித்து உஷாவிடம் கேட்டபோது,

ஜெயேந்திரரிடம் சிஷ்யை என்ற முறையிலேயே அவரிடம் பேசினேன். உடல் நலம்பெற, குணமாக ஆசீர்வாதம் கேட்டேன். அப்போது நான் அழுதேன். ஸ்ரீரங்கத்தில் பொலிஸ் வந்து என்னை விசாரணை செய்தனர். இதனால் அந்தப் பகுதியில் எனக்குப் பிரச்சினை எற்பட்டது. என்னுடைய வயதான தாயாருடன் தங்கியிருக்க முடியவில்லை. அவரும் உடல் நலம் பாதிக்கப்பட்டுள்ளார். இங்கு நீங்கள் எல்லாம் என்னைச் சூழ்ந்து கேள்வி கேட்பது போல் அங்கும் என்னை வந்து சூழ்ந்து கேள்வி கேட்கிறார்கள். அதனால் தான் என் வீட்டைக் காலிசெய்துவிட்டு சென்னையில் உள்ள என்னுடைய உறவினர் வீட்டில் தங்கியுள்ளேன்.

நான் எந்தத் தப்பும் செய்யாமல் உள்ளேன். நான் சாதாரணமாக வாழத்தான் ஆசைப்படுகிறேன். வாழ்ந்து வருகிறேன். ஆனால் பொலிஸார் என்னைக் கீழ்த்தரமாக சித்தரித்து விட்டனர். என்மீது சுமத்தியுள்ள புகார்களை நான் சட்டரீதியாகவே சந்திப்பேன். மீண்டும் என்னை விசாரணைக்கு வருமாறு பொலிஸார் கூறியுள்ளனர் என்றார்.

## மர்மம் என்ன?

திருவரங்கம் வடக்கு அடவளஞ்சான் பகுதியில் உள்ள சக்கரா குடியிருப்பில் வசித்துவந்த உஷா அங்கு யாரிடமும் பேசமாட்டாராம். ஆனால் அவரும் அவரது தயாரும் அடிக்கடி ஆட்டோவில் திருவானைக்காவில் உள்ள உதையலட்சுமி நகர் சந்நிதி வீதி ஆகிய பகுதிகளுக்குக் காலையில் செல்வார்களாம். பின்னர் அவர்கள் வீடு திரும்புவதற்கு நீண்டநேரமாகிவிடும்.

அங்குள்ளவர்கள் பெரும்பாலானோர் தனக்கு சொந்தக் காரர்கள் என்று உஷா கூறிக்கொள்வாராம். பின்னர் அடிக்கடி வங்கிக்குச் செல்வாராம். மாதக் கடைசியில் திருவரங்கம் இந்தியன் வங்கிக்குச் செல்வது வழக்கம். அவர் தங்கியிருக்கும் குடியிருப்பில் யாருடனும் பேசாத உஷா திருவானைக்காவில் சந்நிதி வீதிக்கு அடிக்கடி சென்று பேசுவது மர்ம

வாங்காமல் அவசர அவசரமாகத் தப்பியோடிவிட்டார்.

உஷா திருமணம் ஆனவர் என்று கூறப்படுகிறது. சங்கராச்சாரியாருடன் உஷாவுக்குத் தொடர்பு ஏற்பட்டதால் உஷாவின் கணவர் அவரை விட்டுப் பிரிந்து

நன்றி இணையத்தளம்

சென்றுவிட்டார். இவர்களுக்குக் குழந்தைகள் இல்லை. உஷாவின் கணவர் எங்கே என்று அக்கம் பக்கத்தினர் கேட்டபோது அவர் வெளிநாட்டில் இருக்கிறார். நானும் விரைவில் வெளிநாடு சென்றுவிடுவேன் என்று கூறியிருக்கிறார். உஷாவின் பூர்வீகம் சென்னை என்று கூறப்படுகிறது. அவருக்கு 2 சகோதரர்கள், 5 சகோதரிகள் உள்ளனர்.

# மட்டு.நகரில் பேக்கரி மீது கைக்குண்டுத் தாக்குதல்

மட்டக்களப்பு நகரிலுள்ள பிரபல பேக்கரி யொன்றின் மீது நேற்று முன்தினம் இரவு இனந்தெரியாத நபர்களினால் கைக்குண்டு வீசப்பட்டுள்ளது.

தாண்டவன்வெளி சந்தியிலுள்ள ஷன்சைன் பேக்கரி மீதே இந்தக் கைக்குண்டு வீசப்பட்டுள்ளது. பேக்கரியின் உள்ளே கிரனைட் விழுந்தபோதிலும் அது வெடிக்கவில்லை. இந்த சம்பவத்தின் போது பேக்கரிப் பணியாளர்களும் வாடிக்கையாளர்களும் என சுமார் 10ற்கும் மேற்பட்டவர்கள் அங்கு காணப்பட்டுள்ளனர். வீசப்பட்ட கைக்குண்டு வெடித்திருந்தால் உயிர்ச் சேதங்கள் ஏற்பட்டிருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பாக பேக்கரி உரிமையாளர் ரி.நந்தகுமார் மட்டக்களப்புப் பொலிஸாருக்கு அறிவித்ததையடுத்து குறிப்பிட்ட கைக்குண்டை பொலிஸார் மீட்டுள்ளனர். பொலிஸ் நிலையத்திலிருந்து 300 மீற்றர் தொலைவிலும் தாண்டவன் வெளிச்சந்தி வீதிச் சோதனையிலிருந்து 50 மீற்றர் தொலைவிலும் இந்த பேக்கரி அமைந்துள்ளது. விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து கருணா வெளியேறியதன் பின்பு மட்டக்களப்பு நகரில் தூண்டப்பட்ட வன்முறைகளின் போது இந்த பேக்கரிக்கு சில தீய சக்திகளினால் தீ வைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ரு-4)

# க.பொ.த (சாதாரண தரம்) மாதிரிப் பரீட்சை – 2004

நேரம்: 3மணி

## விவசாயம் பகுதி II

ஆக்கம்: வை.சசிகுமார்,
யா/கைதடி குருசாமி வித்தியாலயம்,
சாவகச்சேரி.

**முதலாம் வினாவுக்கும் வேறு நான்கு வினாக்களுக்கும் விடை தருக**




(I) i)a. மேலே படத்தில் A,B, C குறிக்கும் நதிகளைப் பெயரிடுக.

b. விக்டோறியா நீர்ப்பாசனத் திட்டத்திற்கு உதவிபுரிந்த நாடு எது?

c. இலங்கைக்கு மழை வீழ்ச்சியைத் தரும் பிரதான பருவக்காற்றுக்கள் வரும் திசை படத்தில் குறிக்கப்பட்டது. அவற்றைக் குறிப்பிடுக.

ii. a. வித்து முளைத்தலுக்குத் தேவையான காரணிகள் எவை?

b. வித்து முளைத்தல் முறைகள் எவை? அவை ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு உதாரணம் தருக.

c. நடுவதற்குப் பயன்படுத்தப்படும் வித்துக்கள் கொண்டிருக்க வேண்டிய சிறப்பியல்புகள் எவை?

iii. a. விசேட நாற்று மேடைகள் இரண்டினைக் குறிப்பிடுக.

b. நாற்று மேடையில் நாற்றுக்களைத் தாக்கும் பங்கசு நோயைக் குறிப்பிடுக.

c. நாற்றுமேடை மண்ணை தொற்று நீக்கல் செய்யும் முறைகள் இரண்டு தருக.

iv. a. மண்ணீர் நிலவும் மூன்று விதங்களைக் குறிப்பிடுக.

b. மண்வளம் குறைவதற்கான காரணிகள் எவை?

c. சேதன வளமாக்கிகள் மண்ணிற்கு இடுவதால் கிடைக்கும் நன்மைகள் எவை?

(2)i. தாவரங்களில் பொட்டாசியம் (K) குறைபாடு காரணமாக ஏற்படும அறிகுறிகள் 3 தருக.

ii. பொட்டாசியம் கொண்ட வளமாக்கிகள் இரண்டு தருக.

iii. 210g யூரியாவில் உள்ள நைதரசனின் அளவைக் கணிக்க. (C-12 ,O-16, H-1, N-14)

(3)i. தோடை மரத்தில் மேற்கொள்ளப்படும் ஆப்பொட்டு முறையை வரிப் படத்தின் உதவியுடன் விளக்குக.

ii. இளைய வளர்ப்பு இனப்பெருக்க முறையினால் ஏற்படும் நன்மைகள் எவை?

iii. விவசாய உற்பத்திப் பொருட்களின் காப்பிற்குக் கையாளப்படும் வழிமுறைகள் நான்கு தருக.

(4)i. ஒன்றிணைந்த பயிர்ச்செய்கை என்றால என்ன?

ii. சேனைப் பயிர்ச் செய்கையினால் ஏற்படும் பிரதிகூலங்கள் எவை?

iii. பயிர்ச் செய்கையில் களைகளினால் ஏற்படும் பிரதிகூலங்கள் எவை?

(5)i. நெற்பயிரில் நெற் தண்டு கோதியினால் ஏற்படும் சேதத்தைக் குறிப்பிட்டுக் கட்டுப்படுத்தும் முறையினையும் குறிப்பிடுக.

ii. வாடல் நோயின் நோய்க்காரணி எது? நோய்த்தடுப்பு முறையையும் குறிப்பிடுக.

iii. பொறிமுறை மட்காப்பு முறைகள் இரண்டினைக் குறிப்பிடுக.

(6)i. கோழிகளுக்கு ஏற்படும் நோய்கள் இரண்டினைக் குறிப்பிட்டு, அவற்றின் ஒன்றின் நோய்ககாரணி, நோய்க் குணம்குறிகள் ஆகியவற்றைக் குறிப்பிடுக.

ii. இலங்கையில் ஈரவலயம், உலர்வலயம் ஆகியவற்றில் பால் உற்பத்திக்காக வளப்பதற்கு உகந்த மாட்டினங்கள் ஒவ்வொன்றைக் குறிப்பிடுக.

iii. மாடுகளுக்கு ஏற்படும் மடியழர்ச்சி நோயின் நோய்க்காரணியையும், நோய்க்குணம்குறிகளையும் குறிப்பிடுக.

(7)i. கால் நடை வளர்ப்பை மேம்படுத்த அரசினால் வழங்கப்படும் சேவைகள் எவை?

ii. விவசாயப் பண்ணையில் விலங்குகளுக்கு நோய் ஏற்படுவதைத் தடுப்பதற்குக் கையாளப்படும் வழிமுறைகள் எவை?

iii. விவசாயத்தில் நுண்ணங்கிகளின் பயன்களைக் குறிப்பிடுக.

# மாவீரர் தின அத்துமீறல்கள் குறித்து இராணுவம் மீது வவு.நீதிமன்றம் கண்டனம்

(வவுனியா)

வவுனியா வேப்பங்குளத்தில் மாவீர்தின நிகழ்வின்போது நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பான பொலிஸ் விசாரணைக்கு உதவுமாறு வவுனியா மாவட்ட நீதிபதி, எம்.இளஞ்செழியன் வன்னிப்பிராந்திய ஆயுதப் படைகளின் தளபதிக்கும் வவுனியா 211ஆம் படைப்பிரிவின் படைத்தளபதிக்கும் உத்தரவிட்டுள்ளார்.

சம்பவத்தின்போது இராணுவத்தினரால் எடுத்துச்செல்லப்பட்ட விடுதலைப்புலிகளின் கொடி மற்றும் ஒலிபெருக்கிச் சாதனங்கள் ஆகியவற்றை மீண்டும் ஒப்படைக்குமாறு மற்றுமொரு உத்தரவையும் குறிப்பிட்ட தளபதிகளுக்கு அவர் பிறப்பித்துள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பாக வவுனியா பொலிஸார் நீதிமன்றத்தில் சமர்ப்பித்த அறிக்கையைப் பரீசிலித்த நீதிபதி இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

அவசர காலச்சட்டம் அமுலில இல்லாத நிலையில் இராணுவம் தனது குறைந்த பலத்தைப் பிரயோகிப்பதற்குப் பதிலாகத் துப்பாக்கிப் பிரயோகம் செய்து ஆட்கொலையைப் புரிய முயற்சித்துள்ளதாக நீதிமன்றம் கருதுவதாக நீதிபதி அந்த உத்தரவில் குறிப்பிட்டுள்ளார்.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்தவர்களின் வாக்குமூலங்களின் அடிப்படையில் இராணுவத்தினரால் துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டுள்ளதாக அறியக் கூடியதாகவுள்ளது என பொலிஸார் அந்த அறிக்கையில் குறிப்பிட்டு, சம்பந்தப்பட்ட இராணுவத்தினரை விசாரிப்பதற்கும் ஆயுதங்களைப் பரிசீலிப்பதற்கும் குறிப்பிட்ட இராணுவத் தளபதிகளுக்கு உத்தரவிடுமாறு பொலிஸார் நீதிமன்றத்தைக் கேட்டிருந்தனர். இதனை ஏற்றுக்கொண்ட நீதிபதி இந்த உத்தரவைப் பிறப்பித்தார். அந்த உத்தரவு வருமாறு,

வேப்பங்குளத்தில் நடைபெற்ற துப்பாக்கிப் பிரயோகமானது அத்துமீறிய ஒரு சம்பவமாகும். நேற்று முன்தினம் அவசரகாலச்சட்டம அமுலில் இல்லாத வேளையில இராணுவத்தினர் துப்பாக்கிகளைப் பயன்படுத்தும்போது அது தொடர்பாக அவர்களுக்குரிய வரையறைகளை அவர்கள் தெளிவாகத் தெரிந்திருக்க வேண்டும்.

சிவில் நிர்வாகத்தை நடைமுறைப்படுத்துவதில் பொலிஸ் திணைக்களமே முதன்மையான சட்ட அமுலாக்கல் பிரிவாகச் செயற்பட்டு வருகின்றது. தேவையேற்படும் சந்தர்ப்பத்தில பொலிஸாருக்கு உதவியாக இராணுவம் செயற்படவேண்டும்.

சட்டவிரோதமான செயல்களில் எவரும் ஈடுபடும்போது முதன்மைச்சட்ட அமுலாக்கல் பிரிவினராகிய பொலிஸார் குற்றவியல் சட்ட நடவடிக்கையின் கீழும், குற்றவியல் சட்டத்தின் படி, அமைதிக்குப் பங்கம் ஏற்படுவதைத் தடுப்பதற்கான பிரிவு 81இன் கீழும் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றால் அதனைத் தடுப்பதற்குரிய குற்றவியல் நடைமுறைச்சட்டத்தின் கீழும் பொலிஸ் கட்டளைச் சட்டத்தின் கீழும் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுபவர்களையோ சட்டவிரோதமாகக் கூடி கலகம் விளைவிப்பவர்களையோ கலைபதற்கு நடவடிக்கை எடுக்கலாம்.

ரீ.56 ரக துப்பாக்கி அல்லது இயந்திரத் துப்பாக்கிகள் அவசரகாலச்சட்டம் அமுலில் இல்லாத சூழ்நிலையில் சட்டவிரோதமாக கூடுபவர்களைக் கலைப்பதற்காகப் பயன்படுத்தப்படுமானால், அதிகார பலாதகாரம் புரிந்ததாகக் கருதவேண்டி ஏற்படும்.

எனவே, குற்றம் புரிந்தவர்களை நீதிமன்றத்தின் முன் நிறுத்துமாறு வன்னிப் பிராந்தியத்தின் இராணுவத் தளபதிகளுக்கு நீதிமன்றம் உத்தரவிடுகின்றது. குற்றம் புரிந்த எந்த ஒரு நபரும் சுதந்திரமான புலனாய்விலிருந்தும் சுதந்திரமான வழக்கு விசாரணையிலிருந்தும் சுதந்திரமாக வழக்குதொடுப்பதிலிருந்தும் தப்பிச் செல்ல அனுமதிக்கப்படமாட்டாது.


எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் நீதிமன்றத் தீர்ப்பைத் தவிர வேறு எவரும் எவரையும் தண்டனைக்கு உள்ளாக்க முடியாது. வேப்பங்குளத்தில் நடைபெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் காயமடைந்தவர்கள் வவுனியா அனுராதபுரம் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்றுவருகின்றார்கள்.

இவர்கள் மீது நடாத்தப்பட்ட துப்பாக்கிப் பிரயோகம் கொலை முயற்சிக் குற்றமாகும். எனவே வேப்பங்குளம் சம்பவத்தில் ஈடுபட்ட இராணுவத்தினரின் துப்பாக்கிகள் பரிசீலனைக்கு உட்படுத்தப்பட வேண்டும்.

குறித்த துப்பாக்கிகள் மேலதிக புலன்விசாரணைக்காக வவுனியா பொலிஸ் தலைமையகத்திடம் கையளிக்கப்படவேண்டும். வேப்பங்குளம் சம்பவத்தில இராணுவத்தினரால் கைப்பற்றப்பட்ட அனைத்துப் பொருட்களும் மேல் விசாரணைக்காக உடனடியாக பொலிஸாரிடம் ஒப்படைக்கப்படவேண்டும். இந்தச் சம்பவத்தில் சம்பந்தப்பட்ட இராணுவத்தினா புலன்விசாரணைக்காக பொலிஸாரிடம் ஆஜர் செய்யப்பட வேண்டும். குற்றம் புரிந்தவர்களைக் கண்டுபிடிப்பதற்காக இந்தச் சம்பவம் குறித்து இராணுவப் பொலிஸாரின் மூலம் விசாரணைகள் நடத்த வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த உத்தரவின் பிரதிகள் வன்னிப் பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் நெவில் விஜசிங்க, இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் சாந்த கொட்டேகொட ஆகியோருக்கும தகவலுக்காக சட்டமா அதிபருக்கும் அனுப்பி வைக்கும் உத்தரவும் நீதிமன்ற பதிவாளக்குப் பிறப்பிக்கப்பட்டது.

(க-4)



## அசத்தும் அறிமுகம்

ஜப்பானிய தொலைக்காட்சித் தொடரான 'ஹலோ கிட்டி'யில் வரும் பொம்மையன உருவத்தில என்.ஈ.சி. கணனி நிறுவனம் ரோபோ ஒன்றை உருவாக்கியுள்ளது. இது மனிதர்களின் குரலையும் உணர்ந்துகொள்ளக்கூடியது.

அதுமட்டுமல்லாது ஆயிரம் வார்த்தைகள் வரை பேசும் வலலமை வாய்ந்தது. 6கிலோ நிறையும் 52 சென்ரிமீற்றர் உயரமும் கொண்டது.

இநத ரோபோவிடம் ஒரு அழகி பேசிக்கொண்டிருப்பதைப் படத்தில் காணலாம்.

# ஐயங்கள் ஆயிரம்

## அமாவாசையும் மனநிலையும்

மனநோய் தாக்கியவர்களுக்கு அமாவாசை நெருங்க நெருங்க மனநோய் அதிகமாகறது என்பது பெரும்பாலானோரின் நம்பிக்கை. ஆனால் இதற்கு அறிவியல் முறையில் எந்தவித ஆதாரமும் இல்லை.

மனநோய் உள்ளவர்களது மனப்போக்கும், நடத்தையும், உணர்ச்சி செய்கைகளும் பிறரிடமிருந்து வேறுபட்டுக் காணப்படுவ்தும், சூழ்நிலைகளுக்கு ஒவ்வாதவாறு அமைந்துருபபதும் தவிர அவர்களது மனம் செயற்படாமல் நின்றுவிடுவதில்லை. அவர்களின் செயல்கள் தாறுமாறாகத் தோன்றினாலும், அவையும் அவர்கள் பிறந்து வளர்ந்த நிலத்தின் பண்பின் அடிப்படையிலேயே அமையக்கூடும்.

# ஒளிரும் நட்சத்திரங்கள்

நட்சத்திரமென்பது தாமாகவே ஒளிரும் தொகுதியாகும். எமது சூரியனும் அவ்வாறான சக்தி படைத்த நட்சத்திரம் என்பதுடன் தனித்து ஒளியை உணடாககும் வாய்பபும இதற்கு உணடு.

எனினும் கிரகங்கள் என்று சொல்லக்கூடிய விண்வெளிப்பொருட்கள் இவ்வாறு தம்முடைய ஒளியைத் தாமே உற்பத்தி செய்து கொள்ளும் தன்மையில்லாதவை.

ப,மி, செவ்வாய், வியாழன், வெள்ளி போன்ற கிரகங்கள் இதற்கான உதாரணங்கள ஆகும். இந்தக் கிரகங்கள் சக்தியை உறிஞ்சிக்கொள்வது சூரியனிடமிருந்தே.

எப்படியிருப்பினும் அண்டவெளியில் பரவிககிடக்கும நட்சத்திரங்களின் எண்ணிக்கையை உறுதியாகக் கூறுவதற்கு அண்டவெளி ஆராய்ச்சியாளர்களுக்கு இன்னும் முடியவில்லை.

எனினும், சராசரியாக 10,000,000, 000,000,000,000,000 (1உம் 22 ப,ச்சியங்களும்) என்று கருதுகிறார்கள்.

இவற்றுள் சில நட்சத்திரங்கள் உருவத்தில் பெரியவை. சூரியனைவிட 100ஆயிரமடங்கு பெரிய நட்சத்திரம் அண்டவெளியில்



இருப்பதுடன், எமது மொத்த சூரியகிரக மண்டலத்தைவிடப் பெரிய நட்சத்திரம் இருப்பதாக வும கூறப்படுகின்றது.

# குஷ்வந்தசிங் ஜோக்

## உரசலும் கிள்ளலும்

நெரிசல் மிகுந்த பஸ் ஒன்றில் நடுத்தர வயதுக் கணவனும் மனைவியும் ஏறினார்கள். காலியாக இருந்த சீற்றில் மனைவியை உட்காரவைத்தான் கணவன். அவன் நின்றுகொண்டான். அவனுக்கு முன்னால் ஒரு கல்லூரி மாணவி.


ரைவர் பிறேக் போட்டபோதெல்லாம் சின்னதாய் ஒரு உரசு. அவள் ஒன்றும் சொல்லவில்லை. அவா மனைவி இதைக் கவனித்தாள்.

மூவரும் ஒரே இடத்தில் இறங்கினார்கள். இறங்கியதும் மாணவி 'சப்' என்று அவனைக் கன்னத்தில் அறைந்தாள்.

"என் பின்புறத்தைக் கிள்ள உனக்கு எவ்வளவு துணிச்சல் ராஸ்கல்'' என்று கத்தினாள்.

"நான் கிள்ளவேயில்லை'' என்று சாமிமேல் சத்தியம் செய்தான். உடனே மனைவி குறுக்கிட்டு அவளிடம் சொன்னாள்,

"அவருக்குப் பாடம் கற்பிக்கவேண்டும் என்பதற்குத்தான் அவர் உன்மீது உரசியதும் நான் கிள்ளினேன்'' என்றாள்.



# பெர்னார்ட் ஷா


அறிஞர் பெர்னார்ட் ஷாவின் வாழ்வில் நடந்த ஒரு சுவையான நிகழ்ச்சி.

பெர்னார்ட் ஷா எழுதிய புத்தகம் ஒன்று வெளியான நேரம். புத்தகத்தை வெளியிட்ட பதிப்பாளருக்கு ஷாவிடமிருந்து ஒரு கடிதம் வந்தது. அக்கடிதத்தில் பெர்னார்ட் ஷா எதுவும் எழுதியிருக்கவில்லை. '?' என்ற கேள்விக்குறியை மட்டும் எழுதி, தம் கையெழுத்துப்போட்டு அனுப்பியிருந்தார்.

புத்திசாலியான பதிப்பாளர் ஷாவின் கருத்தைப் புரிந்துகொண்டு, தமது பதில் கடிதத்தில் '!' என்ற குறியைப் போட்டு ஷாவிற்கு அனுப்பினார். உங்களுக்குப் புரிகிறதா?

புத்தக விற்பனை எப்படியிருக்கிறது? என்று '?' குறியின் மூலம் பெர்னார்ட் ஷா கேட்டிருந்தார். ஆச்சரியப்படுமளவிற்குப் பிரமாதமாக விற்பனையாகிக்கொண்டிருக்கிறது என்று '!' குறியின் மூலம் பதிப்பாளர் பதில் எழுதியிருந்தார்.

# குறுக்கெழுத்துப் போட்டி இல-38



*அனுப்ப வேண்டிய முகவரி-*

**குறுக்கெழுத்துப் போட்டி இல - 38**
**'வலம்புரி - சங்குநாதம்'**
**இல:- 15, வெள்ளாந்தெரு,**
**வண்ணார்பண்ணை,**
**யாழ்ப்பாணம்.**

முழுப் பெயர் :- ..............................................................
முகவரி :- ..............................................................
..............................................................
..............................................................

இங்கே வெட்டுக ------------------------------------------------

***மேலுள்ள கூப்பனில் விடைகளை நிரப்பி எதிர்வரும் 09ஆம் த்கதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கவும்.***

## இடமிருந்து வலம்

(1)இதிகாசங்களிலொன்று. (5)ஒரு தானியம (குழம்பயுளளது). (6)உடலில் மட்டுமன்றி மனதிலும் இது ஏற்படுவதுண்டு. (7)பஸ்களில் இது பட்டுத்தான் பயணம் செய்யவேண்டியிருக்கிறது (குழம்பியுள்ளது). (8)நீத்மன்ற ஆவணங்கள் (திரும்பியிருக்கிறது). (9)துப்பாக்கிக் குண்டு. (10)குழம்பு - இப்படியுமழைப்பர்.

## மேலிருந்து கீழ்

(1)இராகங்களிலொன்று. (2)திருவிளையாடல் திரைப்படத்தில் 'ஒரு நாள் போதுமா.....' என்ற பாடலைப் பாடும் பாத்திரத்தின் பெயர். (3)சுயபாதுகாப்பு -இப்படியும் கூறலாம். (4)மகாமகம் உற்சவம் இந்த ஊரில்தான் நடைபெறுகிறது.

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 36இன் விடைகள்

### இடமிருந்து வலம்

1.சங்கமம் 4.கூடி 5.கரும்புல் 7.ஆல் 8.கண்ணியம் 9.தாடி 10.பனி 11.செம்மல்

### மேலிருந்து கீழ்

1.சங்கம் 2.கரம் 3.அடிசில் 6.புண்ணியம் 7.ஆம்பல் 8.கடி 9.தாழை

## பரிசு பெற்றோர் பெயர் விபரம்

**முதற் பரிசு** :- ந.வினோதரன்
புலோலி மத்தி,
புலோலி.

**இரண்டாம் பரிசு** :- செ.தர்மிகா
கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.

**மூன்றாம் பரிசு** :- வ.மன்னர் அன்ரனி
16,சென்ற்யேம்ஸ மேற்குவீதி,
குருநகர்,
யாழ்ப்பாணம்.

## போட்டியில் கலந்துகொண்டு பாராட்டுப்பெறும் அதிஷட்சாலிகளின் பெயர் விபரம்

சொ.நித்தியா, கொக்குவில். வி.இளங்கோ, கோப்பாய். சி.விவேக், வியாபாரிமூலை. திருமதி.பாக்கியநாதன், சங்கானை. சு.தூஷினி, யாழப்பாணம. லோ.அபிராமி, வல்வெட்டி. செ.இராசதேவி, கோப்பாய். ஆ.அனுஷா, சித்தன்கேணி. து.நக்கீரன், மல்லாகம். K.இராஜகோபால், தொல்புரம். த.திவ்வியன, அச்சுவேலி. மாருதி, ஆவரங்கால. சி.நிரோஷன், கரவெட்டி. L.சுவஸ்திகா, உடுப்பிட்டி. சி.சித்தார்த்தன், தரிப்பூர். து.பிரதீபன், மல்லாகம். S.நிகேதினி, வணணார்பணணை. T.S.சஙகீதா, சம்பூரணி, வட்டுக்கோடடை. வி.செந்தூரன், வடலியடைப்பு.

# இன்னல் தரும்
# இதயத் தடுக்கிதழ் நோய்கள்

3

கு.கணேசன்
M.BBS

### 2. கீல் வாதக் காய்ச்சல்

கீல் வாதக் காய்ச்சல் இந்தத் தடுக்கிதழைப் பாதிக்கும் போது சிலருக்குத் தடுக்கிதழ் சுருங்கி சுண்ணாம்புச் சத்துப் படிந்து இரத்தம் முன்னோக்கிச் செல்லத் தடை உண்டாகும்.

### 3. தடுக்கிதழில் ஏற்படும் குறைபாடுகள்

உயர் இரத்த அழுத்தம் காரணமாகவும் முதுமை காரணமாகவும் மகாதமனித் தடுக்கிதழின் சுவர் சிதைந்து போவதுண்டு. அப்போது இந்தத் தடுக்கிதழ் சுருங்கி விடலாம்.

### அறிகுறிகளும் தடயங்களும்

நெஞ்சுவலி, நெஞ்சுப் படபடப்பு, தலைசுற்றல், மயக்கம், மூச்சு விடுவதில் சிரமம், மாடிப்படி ஏறுதல், வீட்டுவேலைகள் செய்வது போன்ற சாதாரண வேலைகளைக் கூட செய்ய இயலாமை, கணுக்கால் வீக்கம் ஆகியவை இந்த நோக்குரிய முக்கிய அறிகுறிகளாகும். நேரடி உடற்பயிற்சியின் போது இதய விரிவு ஒலியில் முணுமுணுப்புக் கேட்கும். இடது கீழ் அறைசெயல் இழந்து இருப்பதை இனங்காட்டும் தடயங்களும் காணப்படும்.

### நோய் நிர்ணயம்

மார்பு ஊடுகதிர்ப்படத்தில் இதயத்தின் இடது மேல் அறை மற்றும் இடது கீழ் அறை விரிந்து இருப்பதைக் காணலாம். மகாதமனித் தடுக்கிதழில் சுண்ணாம்புச் சத்துப் படிந்திருப்பதையும் ஏறுமகாதமனி வீங்கியிருப்பதையும் (Ascending Aorta) காணலாம். இதய மின்னலை வரைபடத்தில் இதயத்துடிப்பு மாறிய நிலைகள், இடது இதய அறைகளின் வீக்கம் ஆகியவற்றைக் காணலாம். இதய எதிரொளி வரைபடம் மகாதமனித் தடுக்கிதழின் அமைப்பு நோயின் கடுமை இதய அறைகளின் அளவு மற்றும் செயல்பாடு ஆகியவற்றைக் காண்பிக்கும். இதயச் செருகு குழாய் சோதனை மூலம் இதய இரத்த வெளியேற்றத்தையும் இதயத்தமனி நிலையையும் அறியலாம். இவற்றோடு இரத்தப் பரிசோதனைகளையும் செய்து நோயை உறுதி செய்தும் நோயின் தன்மையை உணர்ந்தும் சிகிச்சையை தொடங்குவார்கள் மருத்துவர்கள்.

### சிகிச்சை முறைகள்


நோயின் தொடக்கத்தில் ஈரிதழ்த் தடுக்கிதழ்க் குறுக்கத்திற்குக் கூறப்பட்ட மருத்துவ சிகிச்சை முறைகள் இந்த நோய்க்கும் தரப்படும். நோய் மருத்துவ சிகிச்சைக்குக் கட்டுப்படாத போது பழுதுபட்ட தடுக்கிதழை அகற்றிவிட்டு செயற்கைத் தடுக்கிதழைப் பொருத்துவது நல்ல பலனைத்தரும்.

### மகாதமனித் தடுக்கிதழ் எதிரொழுக்குக் (Aortic Regurgitation)

### காரணங்கள்

பிறவியிலேயே மகாதமனித் தடுக்கிதழில் மூன்று இதழ்களுக்குப் பதிலாக இரண்டு இதழ்கள் மட்டும் இருந்து கீல்வாதக் காய்ச்சலால் தடுக்கிதழ் பாதிக்கப்பட்டிருந்தால் இத் தடுக்கிதழில் மூன்று இதழ்களில் ஏதேனும் ஒன்று அமைப்பில் மாறுபட்டு, சரியாக மூடாமல் இருந்தால் இரத்தம் மகாதமனியில் இருந்து இடது கீழ் அறைக்குப் பின்னோக்கிக்கசியலாம்.

வைரஸ் அல்லது பிற நுண்ணுயிரிகளால் இதய உள்ளுறை பாதிக்கப்பட்டிருந்து கிரந்தி நோயின் மூன்றாம் நிலைப் பாதிப்பில் இருந்தால் மார்ஃ



பான் நோயும் இருந்தால் மகாதமனியின் முதற்பகுதி விரிவடைந்திருக்கும். அப்போது மகாதமனித் தடுக்கிதழ் துவண்டு விடுவதால் மகாதமனிக்குள் நுழைந்த இரத்தம் மீண்டும் இடது கீழ் அறைக்குப் பின்னோக்கிக் கசியும். இதனால் மகாதமனித் தடுக்கிதழ் எதிரொழுக்கு நோய் ஏற்படும்.

### அறிகுறிகளும் தடயங்களும்

மகாதமனிக் குறுக்கத்திற்குக் கூறப்பட்ட அறிகுறிகள் இதற்கும் பொருந்தும். குறிப்பாக நோயாளி இடப்புறம் படுக்கும் போது தன்னுடைய இதயத் துடிப்பு அதிகரிப்பதை நன்கு உணர முடியும். நெஞ்சு படபடப்பு, சுவாசிப்பதில் சிரமம், இரவில் உறக்கத்தில் விழிப்பு ஏற்படுவது, கணுக்கால் வீக்கம் ஆகியவை இந்நோய்க்குரிய முக்கிய அறிகுறிகள். மருத்துவர் நோயாளியைப் பரிசோதிக்கும் போது இதய சுருங்கொலியிலும் இதய விரிவொலியிலும் முணுமுணுப்புக் கேட்கும். இவற்றோடு இதயச் செயல் இழப்பிற்குரிய தடயங்களும் காணப்படும்.

### நோய் நிர்ணயம்

மார்பு ஊடுகதிர்ப் படத்தில் இதயத்தின் இடது மேலறை மற்றும் இடது கீழறை விரிந்திருப்பதைக் காணலாம். மகாதமனித் தடுக்கிதழில் சுண்ணாம்புச் சத்துப் படிந்திருப்பதையுதம், ஏறுமகாதமனி வீங்கியிருப்பதையும் காணலாம். இதய மின்னலை வரைபடத்தில் இதயத் துடிப்பு மாறிய நிலைகள் மற்றும் அலையில் மாற்றங்கள், இடது இதயக் கீழறையின் வீக்கம் மற்றும் ஈரிதழ்த் தடுக்கிதழின் முன்னிதழ் உதறல் துடிப்பு ஆகியவற்றைக் காண்பிக்கும். இதயச் செருகு குழாய் சோதனை மூலம் இதய இரத்த வெளியேற்றத்தையும், இதயத்தமனி நிலையையும் அறியலாம். இவற்றோடு இரத்தப் பரிசோதனைகளையும் செய்து, நோயை உறுதி செய்வார்கள் மருத்துவர்கள்.

### சிகிச்சை முறைகள்

நோயின் தொடக்கத்தில் ஈரிதழ்த் தடுக்கிதழ்க் குறுக்கத்திற்குக் கூறப்பட்ட மருத்துவச் சிகிச்சை முறைகள் இந்த நோய்க்கும் தரப்படும். நோய் மருத்துவச் சிகிச்சைக்குக் கட்டுப்படாதபோது, பழுதுபட்ட தடுக்கிதழை அகற்றிவிட்டு, செயற்கைத் தடுக்கிதழைப் பொருத்துவது நல்ல பலனைத்தரும்.

### மூவிதழ்த் தடுக்கிதழ்க் குறுக்கம் (Tricuspid Stenosis)

### காரணங்கள்

இதயத்தின் வலது மேலறைக்கும் வலது கீழறைக்கும் இடையிலுள்ள வலது மேல்- கீழ் அறை இடைத்துளையில் மூவிதழ்த் தடுக்கிதழ் உள்ளது. எல்லாத் தடுக்கிதழ்களைப் போலவே இதன் வேலையும் இதயத்தில் இரத்தத்தை முன்னோக்கிச் செலுத்த உதவுவதுதான். என்றாலும், கீல்வாதக் காய்ச்சலால் இந்தத் தடுக்கிதழ் பாதிக்கப்படும் போது இதன் அளவில் சுருங்கிவிடும். அப்போது மூவிதழ்த் தடுக்கிதழ்க் குறுக்கம் நோய் ஏற்படும். வழக்கத்தில் இந்த நோய் தனியாக ஏற்படுவதில்லை. ஈரிதழ்த் தடுக்கிதழ் நோய்கள், மகாதமனித் தடுக்கிதழ் நோய்கள் ஆகியவற்றுடன் இணைந்து இது காணப்படும். சில நேரங்களில் புற்றினை நோயியத்துடன் (Carcinoid Syndrome) சேர்ந்து காணப்படும்.

மூவிதழ்த் தடுக்கிழ்க் குறுக்கத்தால் இரத்தம் இதயத்தின் வலது மேலறையிலிருந்த வலது கீழறைக்குச் செல்வதில் தடை ஏற்படும். இதன் விளைவாக, வலது மேலறையில் இரத்தம் தேங்கத்துவங்கும். நாளடைவில் இந்த அறையில் இரத்த அழுத்தம் அதிகரிக்கும். இதனால் வலதுபக்க இதயம் செயலிழக்கும்.

### அறிகுறிகளும் தடயங்களும்

இந்த நோயாளியின் வயிறு, கை, கால் ஆகிய பகுதிகளில் நீர் கோர்த்து, வீங்கிவிடும். கழுத்துச்சிரையில் சிரை இரத்த மிகு அழுத்த நிலை (Raised Jugular Venous Pressure) நன்கு தெரியும். கல்லீரல் தொடர்பான நோய்க்குறிகள் தெரியும். குறிப்பாக, மிகுந்த சோர்வு, உடல் தளர்ச்சி உண்டாகும். இவற்றோடு ஈரிதழ்தடுக்கிதழ் நோய்கள், மகாதமனித் தடுக்கிதழ் நோய்கள் ஆகியவற்றின் அறிகுறிகளும் இணைந்து காணப்படும். நேரடி உடற்பரிசோதனையின் போது விரிவு இதய இடையொலியில் முணுமுணுப்பு (Mid- diastolic Murmur) கேட்கும்.

### நோய் நிர்ணயம்

மார்பு ஊடுகதிர்ப் படத்தில் இதயத்தின் வலது மேலறை விரிந்திருப்பதைக் காணலாம். இதய மின்னலை வரைபடத்தில் இதயத் துடிப்பு அலைகள் உயர்ந்து காணப்படும். இதய எதிரொலி வரைபடத்தில் தடுக்கிதழின் அமைப்பு, நோயின் கடுமை. வலது இதய மேலறையின் வீக்கம் ஆகியவற்றைக் காணலாம். இவற்றோடு ஈரிதழ்த் தடுக்கிதழ் நோய்கள், மகாதமனித் தடுக்கிதழ் நோய்கள் ஆகியவற்றின் தடயங்களும் இணைந்து காணப்படும்.

### சிகிச்சை

பழுதடைந்துவிட்ட தடுக்கிதழை அறுவைச் சிகிச்சை மூலம் அகற்றிவிட்டு, செயற்கைத் தடுக்கிதழைப் பொருத்துவதே இதற்குரிய சிகிச்சை முறை என்றாலும், இந்தத் தடுக்கிதழை மட்டும் மாற்றீடு செய்வதால் பலன் கிடைப்பதில்லை. பிற தடுக்கிதழ்களையும் மாற்ற வேண்டும். இது சிரமமான சிகிச்சை முறையாகும்.

### மூவிதழ்த் தடுக்கிதழ் எதிரொழுக்கு (Tricuspid Regurgitation)

### காரணங்கள்

கீல்வாதக் காய்ச்சலினாலும், வலது கீழறை விரிவதாலும் இந்தத் தடுக்கிதழ் துவண்டு, இந்த நோயை ஏற்படுத்துகிறது.

இந்த நோயின் போது இதயத்தின் வலது மேல் கீழ் அறை இடைத்துளையை மூவிதழ்த் தடுக்கிதழ் சரிவர மூடுவதில்லை. ஆகவே, இதயத்தின் வலது மேலறையிலிருந்து வலது கீழறைக்குப் பாய்ந்த இரத்தம் மீண்டும் பின்னோக்கிக் கசியும். இதனால் வலது மேலறையில் சிறிது சிறிதாக இரத்தம் தேங்க ஆரம்பிக்கும். அங்கு அழுத்தம் அதிகரிக்கும். வலது மேலறை விரியும்.

### அறிகுறிகளும் தடயங்களும்

மூவிதழ்த் தடுக்கிதழ்க் குறுக்கத்தில் காணப்படுகின்ற அனைத்து அறிகுறிகளும் இதிலும் காணப்படும். இந்த நோயாளியை மருத்துவர் பரிசோதிக்கும் போது இதயச்சுருங்கொலியில் முணுமுணுப்பு (Pansystolic Murmur) கேட்கும்.

### நோய் நிர்ணயம்

மார்பு ஊடுகதிர்ப்படத்தில் இதயத்தின் வலது மேலறை மற்றும் வலது கீழறை விரிந்திருப்பதைக் காணலாம். இதய மின்னலை வரைபடத்தில் இதயத்துடிப்பு மாறிய நிலைகளைக் காணலாம். இதய எதிரொளி வரை படம் மூவிதழ் தடுக்கிதழின் அமைப்பு, நோயின் கடுமை, வலது மேல் அறை மற்றும் வலது கீழ் அறை வீங்கியிருப்பதைக் காணலாம்.

### சிகிச்சை

மருத்துவச் சிகிச்சையால் இந்த நோயைக்குணப்படுத்த இயலும். வலது பக்க இதயச் செயல் இழப்பிற்குரிய சிகிச்சையை மேற்கொண்டு அதனைச் சரிசெய்தால் போதும் இந்த நோய்க்குரிய அறிகுறிகள் குறைந்துவிடும். இந்தத் தடுக்கிதழ் மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருந்தால் செயற்கைத் தடுக்கிதழ் பொருத்தும். அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளப்படும்.

### நுரையீரல் தாமனித் தடுக்கிதழ்க் குறுக்கம் (Pulmonary Stenosis)

### காரணங்கள்

இந்த நோய் பெரும்பாலும் பிறவிக்குறைபாடு காரணமாகவே ஏற்படுகிறது. இது தனி ஒரு நோயாகவும் ஏற்படலாம். அல்லது ஃபேலட்டின் நான்கு குறைபாடுகள் (Fallots Tetralogy) எனும் நோயுடன் இணைந்தும் உண்டாகலாம்.

### அறிகுறிகளும் தடயங்களும்

வலது இதயச் செயலிழப்பிற்குரிய எல்லா அறிகுறிகளும் தடயங்களும் இந்த நோய் உள்ளவரிடம் காணப்படும். குறிப்பாக வயிறு வீக்கம், கணுக்கால் வீக்கம், கல்லீரல் நோய் தொடர்பான அறிகுறிகள் தெரியும். கழுத்துச் சிரையில் சிரை இரத்த மிகு அழுத்த அலை தெரியும்.

இதயச் சுருங்கொலியில் முணுமுணுப்பு கேட்கும். இந்த முணுமுணுப்பு இடது தோள்ப் பட்டை வரை பரவும். மேலும் இது இடது காரை எலும்பின் மீது (Sternum) அதிக ஒலியில் கேட்கும்.

### நோய் நிர்ணயம்

மார்பு ஊடுகதிர்ப் படத்தில் நுரையீரல் தாமனி அதிக அளவு வீங்கியுள்ளதைக் காணலாம். இதய மின்னலை வரைபடத்தில் வலது இதய அறைகள் வீங்கி இருப்பதைக் காணலாம். இதய எதிரொலி வரைபடத்தில் இதய அறைகளின் வீக்கத்தை உறுதி செய்யலாம்.

### சிகிச்சை

இந்த நோய்க்கு மருத்துவச் சிகிச்சையே போதுமானது எனினும் நோய் மிகக் கடுமையாக இருக்கும்போது அறுவைச் சிகிச்சை தேவைப்படும்.

### நுரையீரல் தாமனித் தடுக்கிதழ் பின்னொழுக்கு

இந்த நோய் மிகமிக அரிதாக ஏற்படக்கூடிய நோய். நுரையீரல் உயர் இரத்த அழுத்தம் ஏற்படும் போது நுரையீரல் தாமனி விரிவடையும். அப்போது இந்த நோய் ஏற்படும். சில நேரங்களில் ஈரிதழ்த் தடுக்கிதழ்க் குறுக்கம் நோயின் போது இந்த நோயும் சேர்ந்து வரும். மருத்துவப் பரிசோதனையின் போது இந்த நோயையும் மகாதமனித் தடுக்கிதழ் பின்னொழுக்கு நோயையும் பிரித்துணர்வது கடினம். இதய எதிரொலி வரைபடத்தின் மூலம் இந்த நோயை உறுதிசெய்யலாம். (முற்றும்)

---

## மேர்வின் சில்வாவிற்கு டாக்டர் பட்டம்

(கொழும்பு)

பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற மெடிசினா ஆல்ரனைற்றிவா எனும் அமைப்பின் 42 ஆவது வருடாந்த மாநாட்டில் மேர்வின் சில்வாவிற்கு டாக்டர் பட்டம் வழங்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் இந்தியா, பாகிஸ்தான், தென்னாபிரிக்கா ஆகிய நாடுகள் உட்பட 130 நாடுகளில் இருந்து வருகை தந்த மேற்படி அமைப்பின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

இருப்பினும், இவருக்கு டாக்டர் பட்டம் எதற்காக வழங்கப்பட்டது? என எத்தகைய காரணங்களும் கூறப்படவில்லை.

மேற்படி நிகழ்வின் சிறப்பம்சமாக மாற்று மருத்துவத்திற்கான நோபல் பிரிவிற்கு டாக்டர் ரவி பொன்னையாவின் பெயர் பிரேரிக்கப்பட்டது.

மேற்படி அமைப்பு உலக சுகாதார நிறுவனத்தின் கீழ் 1962 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டது. தற்போதைய இவ் அமைப்பின் தலைவரான டாக்டர் அன்ரன் ஜயசூரிய மேற்படி நிகழ்விற்குத் தலைமைதாங்கினார். இம்மாநாடு எதிர்வரும் 6 ஆம் திகதிவரை நடாத்தப்படும். முதல்நாள் நிகழ்வில் முன்னாள் அமைச்சர்கள் ஜீ.எல்.பீரிஸ் மற்றும் ஜோன் அமரதுங்க ஆகியோரும் கலந்து கொண்டனர். (ற-6)

# இந்தியா-தென் ஆபிரிக்கா இரண்டாவது டெஸ்ட்

## வெற்றி தோல்வியின்றி முடிவடைய வாய்ப்பு

இந்தியா-தென்னாபிரிக்கா அணிகளிடையே கொல்கத்தா ஈடன் கார்டன் மைதானத்தில்



நடைபெற்றுவரும் இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெற் போட்டியும் வெற்றி தோல்வியின்றி முடிவடையும் நிலையே காணப்படுகிறது.

கடந்த ஞாயிறன்று ஆரம்பமான இப்போட்டியில் தென்னாபிரிக்க அணி தனது முதல் இன்னிங்ஸில் 305 ஓட்டங்களை எடுத்திருந்தது. நேற்று முன்தினம் இரண்டாம் நாள் ஆட்டத்தின் போது தொடர்ந்து இந்திய அணி தனது முதல் இன்னிங்ஸை ஆடியது.

இந்திய அணிக்காக வீரேந்தர் ஷெவாக், கௌதம் காம்பீர் ஆகியோர் ஆட்டத்தை ஆரம்பித்தனர். ஆயினும் காம்பீர் 7ஓட்டங்களை மாத்திரம் பெற்ற நிலையில் எல்.பி.டபிள்யூ போலக்கின் பந்துவீச்சில் ஆட்டமிழந்



தார். இரண்டாம் நாள் ஆட்ட முடிவில் இந்திய அணி 1 விக்கெற்றை இழந்து 129 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. ஷெவாக் 82 ஓட்டங்களுடனும் டிராவிட் 33 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காதிருந்தனர்.

நேற்று முன்தினம் 3ஆம் நாள் ஆட்டம் தொடர்ந்த போது இருவரும் தொடர்ந்து ஆடினர். தொடர்ந்து பல போட்டிகளில் சிறப்பாக விளையாடிவரும் ஷெவாக் இப் போட்டியிலும் சதமடிப்பார் என எதிர்பார்க்கப்பட்ட போதும் அவர் 88ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். இந்திய அணி 144 ஓட்டங்களைப் பெற்றிருந்தவேளை, 2 சிக்ஸர் 11 பவுண்டரிகள் உட்பட இந்த எண்ணிக்கையைப் பெற்ற ஷெவாக், நிற்றனியின் பந்துவீச்சில் ஸ்மித்திடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.



தொடர்ந்து டெண்டுல்கர் டிராவிட்டுடன் இணைந்துகொண்டார். இப் போட்டியிலும் டெண்டுல்கர் ரசிகர்களுக்கு ஏமாற்றத்தையே அளித்தார். அவர் 20 ஓட்டங்களுடன் புரூனின் பந்துவீச்சில் நேரடியாக விக்கெற் வீழ்த்தப்பட்டு ஆட்டமிழந்தார்.

அதன்பின் கங்குலி டிராவிட்டுடன் இணைந்துகெண்டார். இந்திய அணி எண்ணிக்கை 238ஆக இருந்தபோது டிராவிட்டின் விக்கெற் வீழ்த்தப்பட்டது. அவர் 80 ஓட்டங்களுடன் ஹோலின் பந்துவீச்சில் நேரடியாக விக்கெற் வீழ்த்தப்பட்டு ஆட்டமிழந்தார். இவரது 80 ஓட்டங்களில் 8 பவுண்டரிகளும் அடங்கும்.

தொடர்ந்து கங்குலியும் 40 ஓட்டங்களுடன் இந்திய அணி எண்ணிக்கை 267 ஆக இருந்த போது புரூனின் பந்து வீச்சில் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார். லக்ஸ்மன் 38 ஓட்டங்களுடன் நிற்றனியின் பந்து



வீச்சில் ஒன்ரொங்கிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார்.

நேற்று முன்தினம் இறுதியாக இர்பான்பதன் ஆட்டமிழந்தார். அவர் 24 ஓட்ட ங்களுடன் நிற்றனியின் பந்து வீச்சில் காலிஸிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார். மூன்றாம் நாள் ஆட்ட முடிவில் இந்திய அணி 7 விக்கெற்றுக்களை இழந்து 374 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

நேற்று நான்காம் நாள் ஆட்டம் தொடர்ந்த போது இந்திய அணி 411 ஓட்டங்களுக்கு தனது சகல விக்கெற்றுக்களையும் இழந்தது.

43 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காதிருந்த டினேஸ் கார்த்திக்கும் 3 ஓட்டங்களுடனிருந்த கும்ளேயும் ஆட்டத்தைத் தொடர்ந்தனர். கார்த்திக் மேலும் 3 ஓட்டங்களை மாத்திரம் பெற்ற நிலையில் 46 ஓட்டங்களுடன் போலக்கின் பந்து வீச்சில் எல். பி. டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார். கும்ளே 9 ஓட்டங்களையும் ஹர்பஜன்சிங் 14 ஓட்டங்களையும் பெற்றனர். சஹீர் கான் ஆட்டமிழக்காது 11 ஓட்டங்களை எடுத்தார். உதிரிகளாக 35 ஓட்டங்கள் கிடைத்தன.

தென்னாபிரிக்க அணி சார்



பில் பந்து வீச்சில் நிற்றனி 4 விக்கெற்றுக்களையும் போலக், புரூன் இருவரும் தலா 2 விக்கெற்றுக்களையும் ஒன்ரொங்,ஹோல் இருவரும் தலா 1 ஒரு விக்கெற்றையும் வீழ்த்தினர்.

தொடர்ந்து தனது இரண்டாவது இன்னிங்சை ஆடும் தென்னாபிரிக்க அணி தனது இரண்டாவது இன்னிங்ஸில்தேநீர் இடைவேளையின்போது 3 விக்கெற்றுக்களை இழந்து 126 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. ஆட்டம் தொடர்கிறது. (7)

# உலக ஜூனியர் செஸ் போட்டி

## ஹரி கிருஷ்ணா சம்பியனானர்

உலக ஜூனியர் செஸ் போட்டியில் இந்தியாவின் பிரபல செஸ் வீரர் ஹரி கிருஷ்ணா சம்பியன் பட்டத்தை வென்றுள்ளார்.

நேற்று முன்தினம் கேரள மாநிலத்தின், கொச்சியில் நடை



பெற்ற இப்போட்டித் தொடரின் 13ஆவதும் இறுதியானதுமான போட்டியில் இந்திய வீரர் ஹரி கிருஷ்ணா ஹங்கேரி வீரர் பெரங்க் பேர்க்ஸை எதிர்த்து விளையாடினார்.

இருவரும் மிகவும் கவனமாக காய்களை நகர்த்தி செயற்பட்டனர். இறுதியில் 50ஆவது நகர்த்தலின்போது இருவரும் போட்டியை வெற்றி தோல்வியின்றி முடிக்க இணங்கினர்.

இதனையடுத்து ஹரிகிருஷ்ணா 10 புள்ளிகளை மொத்தமாகப் பெற்று சம்பியன் பட்டத்தைத் தனதாக்கிக் கொண்டார். இப் பட்டத்தை வென்றதன் மூலம் விஸ்வநாதன் ஆனந்துக்கு அடுத்தபடியாக உலக ஜூனியர் பட்டம் வென்ற இரண்டாவது இந்தியர் என்ற பெருமையும் இவருக்குக் கிடைக்கிறது.

1987ஆம் ஆண்டு பிலிப்பைன்ஸில் நடைபெற்ற போட்டியில் ஆனந்த் வெற்றிபெற்றார். அதற்குப்பின் இப்போதுதான் இந்தியாவுக்கு வெற்றி கிடைத்திருக்கிறது.

இவ்வெற்றி குறித்து கிருஷ்ணா கருத்துத் தெரிவிக்கையில் தான் மிகவும் மகிழ்ச்சி அடைந்துள்ளதாகவும், அடுத்த வருடம் ஜனவரியில் நடைபெறவுள்ள ஆசிய சம்பியன் ஷிப் போட்டியில் வெற்றி பெறுவதே தனது அடுத்த குறிக்கோள் என்றும் கூறினார்.

இப் போட்டியில் சீன வீரர் ஜோசன் 9.5 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்தைப் பெற்றார்.

இச்சம்பியன்ஷிப் போட்டியில் பெண்கள் பிரிவில் ரஷ்யாவின் எகாதிரினா கோர்பட் 10.5 புள்ளிகளைப் பெற்று சம்பியன் பட்டத்தை வென்றுள்ளார். (7)

**விளையாட்டு செய்திகள்**

# தேசிய மனித உரிமைகள் அமைப்பின்

## பிரதிநிதிகள் நேற்று யாழ்.வருகை

இடம்பெயர்ந்த மக்களினதும் மீளக்குடியமர்ந்த மக்களினதும் மனித உரிமைகள் நிலைமைகளை ஆராய்வதற்காக அவுஸ்திரேலியாவைத் தலைமையகமாகக் கொண்டு இயங்குகின்ற தேசிய மனித உரிமைகள் அமைப்பின் ஆசிய பசுபிக் மன்றத்தின் துணை இயக்குநர் பைப் பெரஹன் கலாநிதி மரியோ ஹொமல் மற்றும் டேவிட் பிஷிஸா ஆகியோர் நேற்று யாழ்.குடா நாட்டுக்கு வருகை தந்திருந்தனர்.

யாழ்.மாவட்ட செயலகத்துக்கு விஜயம் செய்த இக்குழுவினர் யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமியைச் சந்தித்துக் கலந்துரையாடினர். இச்சந்திப்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.மாவட்ட அலுவலக இணைப்பாளர் றுவான் சந்திரசேகர, செயலகத் திட்டமிடல் பணிப்பாளர் பு.சுந்தரம்பிள்ளை மற்றும் யாழ்ப்பாணம், நல்லூர், தெல்லிப்பழை, சாவகச்சேரி பிரதேச செயலர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

மனித உரிமைகள் சம்பந்தமாக யாழ்.குடாநாட்டு மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் யாழ்.குடாநாட்டில் இராணுவ உயர் பாதுகாப்பு வலயங்கள் காரணமாகத் தமது சொந்த இடங்களில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் ஆகியன குறித்தும், இவற்றைத் தீர்ப்பதற்கு உரிய வழிமுறைகள் பற்றியும் இச்சந்திப்பின் போது விரிவாக எடுத்துக் கூறப்பட்டது.

இவைதவிர, யாழ்.குடாநாட்டு மக்களின் சுகாதாரத் தேவைகள், அதிலுள்ள பிரச்சினைகள் மற்றும் கல்வி சம்பந்தமான பிரச்சினைகள் உட்பட மற்றும் பல விடயங்கள் குறித்தும் யாழ். மேலதிக அரச அதிபர் மேற்படி குழுவினருக்கு விரிவாக விளக்கிக்கூறினார்.

மேற்படி குழுவினர் கடந்த மாதம் 29ஆம் திகதியளவில் இலங்கையை வந்தடைந்து நேற்றுக் காலை யாழ்ப்பாணம் வந்துசேர்ந்தனர். நேற்று மாலை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ்.மாவட்ட அலுவலகத்தில் அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையப் பிரதிநிதிகளைச் சந்தித்துக் கலந்துரையாடினர். (ற-5)

## அதிபர் வெற்றிடங்களை நிரப்பும் அதிகாரம் மாகாண சபைகளிடம்?


(கொழும்பு)

நாட்டில் உள்ள 1ஏபி, 1சி தர பாடசாலைகளில் நிலவும் அதிபர் வெற்றிடங்களை நிரப்பும் அதிகாரத்தை மாகாண சபைகளிடம் ஒப்படைக்க கல்வி அமைச்சுத் திட்டமிட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, நாட்டில் உள்ள 84 தேசியப் பாடசாலைகளுக்கான அதிபர்களை நியமிக்க தற்போது நேர்முகப் பரீட்சை நடத்தப்பட்டு வருகின்றது. அத்துடன் 58 தேசியப் பாடசாலைகளுக்கு அதிபர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மேலும், தேசிய பாடசாலையில் அதிபர் ஓய்வு பெறும் பட்சத்தில் பொருத்தமான அதிபரை நியமிக்கவென தற்போது தகுதியானோரை இனங்காணும் பணியும் இடம்பெற்று வருகின்றது.

இதற்கிடையில் மாகாணப் பாடசாலைகளில் நிலவும் அதிபர் வெற்றிடங்களை மாகாணக் கல்வி அமைச்சு நிரப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமெனத் தெரிவிக்கப்படுகிறது. (க)






இலங்கை மனிதஉரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.மாட்ட அலுவலகத்தில் நேற்று தேசிய மனித உரிமைகள் அமைப்பின் ஆசிய பசுபிக் மன்றப் பிரதிநிதிகள் யாழ்.மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையப் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடிய போது எடுக்கப்பட்ட படங்கள். (படங்கள்:- சிவசங்கர்)

# பிலிப்பைன்ஸில் பாரிய வெள்ளப்பெருக்கு

## 350பேர் உயிரிழப்பு;150பேரைக் காணவில்லை

(மணிலா)

பிலிப்பைன்ஸ நாட்டில் ஏற்பட்ட திடீர் வெள்ளப்பெருக்கு மற்றும் நிலச் சரிவில் சிக்கி 350பேர் உயிரிழந்துள்ளனர். மேலும் 150பேரைக் காணவில்லை.



பிலிப்பைன்ஸின் வட பகுதியில் உள்ள கடற்கரை நகரங்கள் நீரில் மூழ்கியுள்ளன. இதுகுறித்துப் பிலிப்பைன்ஸ் நாட்டின் சமூக நலத்துறை செயலாளர் கோரசான் சாலிமேன் கூறியதாவது.

பிலிப்பைன்ஸ் நாட்டில் கடந்தவாரம் கடுமையான சூறாவளி ஏற்பட்டது. இதனால், கடும மழை பெய்த்து. அதன் எதிரொலியாக உருவான வெள்ளம் பிலிப்பைன்ஸ் நாட்டையே புரட்டிப் போட்டுக்கொண்டிருக கிறது.

தலைநகர் மணிலாவின் கிழக்குப் பகுதியில் 70 கிலோமீற்றர் தொலைவில உள்ள கியூசோன் மாகாணத்தில் கடந்த திங்கட்கிழமை மாலை ஏற்பட்ட திடீர் வெளளப்பெருக்கு மற்றும் நிலச்சரிவில் ஆயிரக்கணக்கான வீடுகள் சேதமடைந்தன. இந்தச் சம்பவங்களில் சிக்கி 316பேர் இறநதனர். பிறபகுதிகளில் அதன்பின்னர் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில் சிக்கி 34 பேர் இறந்தனர். 150 பேரைக் காணவில்லை.

மீட்புப்பணியில் இராணுவத்தினர் ஈடுபட்டுள்ளனர். பிலிப்பைன்ஸின் வட பகுதியில உள்ள கடற்கரை நகரங்கள் நீரில் மூழ்கியுள்ளன. நிலச்சரிவினால் வீதிப்போக்குவரத்துக்கள் துண்டிக்கப்பட்டுள்ளன. இதனால் மட்புப்பணிகளைத் துரிதமாக மேற்கொள்ளமுடியவில்லை.

இதற்கிடையில் மற்றொரு சூறாவளி விரைவில் பிலிப்பைன்ஸைத் தாக்கக் கூடும் என்று வானிலை ஆராய்ச்சி மையம் எசசரிக்கைவிடுத்துள்ளது. இதைச் சமாளிக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேீற்கொள்ளப்பட்டு வருகின்றன என கோரசான் சாலிமேன் கூறினார். (ற)



லாவோஸ் தலைநகர் வெய்ன் டினில் நடக்கும் ஆசியான் மாநாட்டில் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங், சீனப பரதமர் வென் ஜியா போவை சந்தித்துப் பேசிய காட்சி.

# அமெ. விமானம் ஆப்கானில் மாயம்

(வோஷிங்டன்)

ஆப்கானிஸ்தான் மீது பறந்த தனது விமானமொன்று காணாமற்போயுள்ளதாக அமெரிக்க இராணுவம் அறிக்கை யொன றின் வாயிலாக அறிவித்துள்ளது.

இவ்விமானத்தில் மூன்று விமானிகளும், மூன்று இராணுவத்தினரும் இருந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மத்திய ஆப்கானிஸ்தானின் இந்து குஷ்மலைப் பிராந்தியத்தில் இவ்விமானத்தைக் கண்டுபிடிக்கத் தேடுதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. (ற-9)

## WORLD NEWS உலக தரிசனம்

### எல்லைப் பிரச்சினையைத் தீர்ப்பது குறித்து

# இந்திய – சீனப் பிரதமர்கள் நீண்ட நேரம் பேச்சுவார்த்தை

எல்லைப் பிரச்சினையைத் தீர்க்க உதவுவதாக லாவோசில் நடந்த 40 நிமிடச் சந்திப்பில் பிரதமர் மன்மோகன் சிங்கிடம் சனப் பிரதமர் வென் ஜியா போ உறுதியளித்துள்ளார்.

லாவோஸ் தலைநகர் வெய்ன்டினில் நடக்கும் இந்திய - ஆசியான் மாநாட்டிலேயே நேற்று முன்தினம் பிரதமர் மன்மோகன் சிங், சீனப் பிரதமர் வென் ஜியா போவைச் சந்தித்துப் பேசினார்.

அப்போது எல்லைப் பிரச்சினை. இந்திய - சன வர்த்தக, பொருளாதார உறவு உட்பட மற்றும் பல முக்கிய பிரச்சினைகள் குறித்தும் இரு தலைவர்களும் சுமாா 40 நிமிடம் பேசினர்.

மேலும் இந்தியா வரும்படி சீனப் பிரதமருக்கு மன்மோகன் சிங் அழைப்பு விடுத்தார். அதை ஏற்று, ஏற்கனவே திட்டமிட்டபடி அடுத்த ஆண்டு மார்ச் மாதம் இந்தியா வருவதாக சீனப் பிரதுமர் வென் ஜியா



போ உறுதியளித்தார்.

அதற்கு முன்னதாக இருநாட்டு எல்லைப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான நெறிமுறைகளை வகுக்கவும் முடிவு செய்யப்பட்டது. இதுதவிர, சிக்கிம் மாநிலத்தை இந்தியாவின் ஒருங்கிணைந்த பகுதி என்று சீனா விரைவில் அறிவிக்கும் எனறும சீனப் பரதமர் வென் ஜியா போ உறுதியளித்தார்.

இதன்பின்னர் சீனப் பிரதமர் வென ஜியா போ நிருபர்களிடம் கூறியதாவது,

நானும், இந்தியப் பிரதமர் மன் மோகன் சிங்கும் கைகுலுக்கிக்கொணடமையானது உலக நாடுகளின் கவனம் முழுவதையும் எங்கள் மீது திரும்பச் செய்துள்ளது. எனது சுறறுப்பயணத்தில் அடுத்த ஆண்டு இந்தியா செல்வதை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதுகிறேன்.

இந்தியாவுக்கும், சீனாவுக்குமிடையில் எல்லைப்பிரச்சினை இருப்பது உண்மை. இதை ஒரேநாளில் பேசித் தீர்த்துவிட முடியாது. அதற்குக் கால அவகாசம் தேவை எனக் கூறினார்.

பிரதமர் மன்மோகன் சிங் நிருபர்களிடம் கூறுகையில்,

சீனப் பிரதமர் கூறியது உண்மை. எல்லைப் பரச்சினையில் நாங்கள் ஒருவருக்கொருவா விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையுடன் நடநதுகொள்கிறோம். எனினும் நடைமுறைக்குச் சாத்தியமான விஷயஙகளுக்கு மட்டுமே அதிக முக்கியத்துவம் அளிக்கிறோம் என்று தெரிவித்தார். (ற)

# இந்தோனேஷியாவில் விமான விபத்து

## 33 பேர் பலி;61 பேர் படுகாயம்

(சோலோ)

இந்தோனேஷியாவில் நேற்று முன் தினம் பயணிகள் விமானம் தரையிறங்கும்போது தரையில் மோதி விபத்துக்குள்ளானதில அதில் பயணம் செய்த 33பேர் பலியானதுடன் 61பேர் படுகாயமடைந்தனர்.

இந்தோனேஷியாவில் கடந்த சில நாட்களாகத் தொடர் மழை பெய்து வருகிறது. மத்திய ஜாவா என்னுமிடத்தில் உள்ளது சோலோ நகர். ஜகார்த்தாவிலிருந்து புறபட்ட லயன் ஏர் ஜெட் விமானம் நேற்று முன்தினம் இரவு சோலோ நகர விமான நிலையத்திற்கு வந்தது. அதில் 153 பயணிகள் இருந்தனா.

சோலோ நகர் விமான நிலையத்தில் விமானம் தரையிறங்கும்போது கனமழை காரணமாக விமான ஓடுதளத்தில் விமானம் வழுக்கிச் சென்றது. பின்னர் விமானத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் போனதால், தரையில் மோதி விமானம் விபத்துக்குளளானது.

இந்த விபத்தில் 33பேர் இறந்தனர். 61பேர் படுகாயமடைந்தனர். விமானததின ஒரு இறக்கை தனியே உடைந்து விழுந்தது. விமானததின் உடல்பகுதி பலமாகப் பாதிக்கப்பட்டது. (ற)



டில்லியில் நடந்த பெண்களுக்கான கைக் கடிகார அறிமுக விழாவில் இந்திய கிரிக்கெற் வீரர் யுவராஜ் சிங் தனது தோழியுடன் வந்த காட்சி.

### இராணுவ தொழில்நுட்ப பகிர்வு விவகாரம்

# ரஷ்ய பாதுகாப்பு அமைச்சர் இந்தியாவுக்கு திடீர் நிபந்தனை

(மொஸ்கோ)

அறிவுசார்ந்த சொத்துரிமை பாதுகாப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திடும் வரை இந்தியாவுடன் இனிமேல் இராணுவ நவீன தொழில்நுட்பங்களைப் பகிர்ந்து கொள்ளமுடியாது என ரஷ்ய பாதுகாப்பு அமைச்சர் செர்ஜி இவானோவ் கூறினார்.

ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின் நாளை இந்தியா செல்லவுள்ளார். அவரது பயணத் திட்டத்தை உறுதிப்படுத்தப் பாதுகாப்பு அமைச்சர் இவானோவ் நேற்று முன்தினம் டிலலி புறப்பட்டார். புதுடில்லியில் இந்திய-ரஷ்ய இராணுவ ஒத்துழைப்புக் கூட்டத்தில் பிரணாப் முகர்ஜியுடன் புடின் பங்கேற்கிறார்.

இந்தப் பயணம் குறித்து நிருபர்களிடம் செர்ஜி இவானோவ் கூறியதாவது,

அறிவுசார்ந்த சொத்துரிமை பாதுகாப்பு ஒப்பந்ததததை ரஷ்யா தயாரித்தது. அதன் நகல் இரண்டு ஆண்டுகளுக்கு முனனரே இந்தியாவிற்கு அனுப்பபபட்டது. இந்தியா இதுவரை அதை பரிசீலிககவும் இல்லை. அதுபற்றி ஆலோசனை கூற வும் இல்லை.

இந்த ஒப்பநதத்தில் இந்தியா கையெழுத்திட்டால்தான் எதிர்காலத்தில் இராணுவ நவன தொழில்நுட பங்களைப் பகா்ந்துகொள்ள முடியும். இல்லாவிட்டால் எதிர்காலக் கருத்துப் பரிமாற் றங்களுக்குத் தடை ஏற்படும், எங்களால் தொழில்நுட்ப ஒத்துழைப்பு வழங்க இயலாது. எங்கள் பொறுப்பை நாங்கள் நிறைவேற்றும் கட்டாயத்தில் இருக்கிறோம் என்றார். (ற)

பல்குழுவும் பாழ்செய்யும் உட்பகையும் வேந்தலைக்கும்
கொல்குறும்பும் இல்லது நாடு - குறள்

வலம்புரி

# யாழ். குடாநாட்டில் சட்டம், ஒழுங்கு சீர்குலைந்துள்ளது

தட்டிக் கேட்க ஆளில்லை என்றால் தம்பி சண்டைப் பிரசண்டம் என்பது தமிழ்ப் பழமொழி. அந்தப் பழமொழிக்கு தற்போதைய யாழ்ப்பாண நிலைபரம் நல்லதோர் சான்றாக அமைந்துள்ளது.

எங்கும் கோஷ்டி மோதல், குழுச் சண்டை, வாள் வெட்டு, வீடு எரிப்பு இப்படியே ஒரு பெரும் குற்றப் பத்திரத்தை முன்வைக்க முடியும். இடத்துக்கிடம், பிரிவுக்குப்பிரிவு பொலிஸ் நிலையங்கள் இருக்கின்ற போதிலும் கோஷ்டி மோதல்களை கட்டுப்படுத்த முடியவில்லை எனில் அதற்கான காரணம்தான் என்ன? இது யாழ்ப்பாணத்து புத்தஜீவிகள் சேர்ந்து ஆராய வேண்டிய விடயம்.

ஒரு காலத்தில் இறுக்கமான கலாசாரத்துடன், ஒழுக்க நெறியை தம் உயிரிலும் மேலாக மதித்து நடந்த யாழ்ப்பாணத்தில் இப்படியொரு அவலநிலை ஏன் ஏற்பட்டது?

சந்திக்குச் சந்தி மதுபானசாலைகள், மூலைக்கு மூலை கசிப்பு உற்பத்தி விற்பனை நிலையங்கள், இளைஞர் கூட்டம் மது போதையில் பெரும் அட்டகாசம், பொலிஸாருக்கு முன்பாகவே கோஷ்டி மோதல் இடம்பெறுகின்றது. இங்குதான் இனத்துவ வேறுபாடு வெளிப்படுகிறது.

யாழ்ப்பாணத்தில் கடமையாற்றும் சிங்கள பொலிஸாரைப் பொறுத்தரை அவர்கள் யாழ்ப்பாணத்தில் சட்டம், நீதி, ஒழுங்கை நிலைநாட்ட வந்தவர்கள் அல்லர். அவர்கள் யாழ்ப்பாணமும் இலங்கை என்ற நாட்டின் ஒரு பகுதி என்பதை உறுதி செய்வதற்காக கடமை செய்பவர்கள்.

இதன் காரணமாக அவர்கள் யாழ்ப்பாண இளைஞர்களிடையே ஏற்படுகின்ற கோஷ்டி மோதல்களை தடுக்கவோ அன்றி அது குறித்து உரிய நடவடிக்கை எடுப்பதிலோ அதிக கவனம் செலுத்தப் போவதில்லை. இதன் காரணமாக யாழ்ப்பாணத்தில் இளைஞர்களின் அடாவடித்தனங்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. கடந்த ஒரு சில தினங்களுக்குள் மட்டும் குருநகரில், கொக்குவிலில், காரைக்காட்டில், கந்தர்மடத்தில் என்று கோஷ்டி மோதல்கள் ஏற்பட்டுள்ளன. அதிலும் குருநகர்ப் பகுதியில் ஏற்பட்டுள்ள கோஷ்டி மோதலானது பெரும் நஷ்டங்களை ஏற்படுத்தியுள்ளதுடன் உயிராபத்துக்களையும் ஏற்படுத்தும் அளவில் உக்கிரமடைந்துள்ளது.

கிறிஸ்தவ மதகுருமார் தேவாலயங்கள் என்ற வலுவான சமய அமைப்புக்கள் இருக்கின்றபோது குருநகரில் இப்படியொரு கோஷ்டி மோதல் ஏற்பட்டதற்கான காரணம் என்ன?

அப்பகுதியில் உள்ள கிறிஸ்தவ அமைப்புகளும், மதகுருமாரும் தங்களின் கடமையிலிருந்து விலகிவிட்டனரா? அல்லது அவர்கள் அரசியல் என்ற நீரோட்டத்தில் இறங்கி பெரிய இடத்தை பிடிக்க முற்பட்டுள்ளனரா என்ற சந்தேகத்தை மக்களிடையே ஏற்படுத்தியுள்ளது.

எதுவாயினும், எந்த மதமாயினும் முதலில் தனது அயலவனை, சமூகத்தை ஒழுங்குபடுத்தவும், திருத்தவும் பாடுபடவேண்டும். அப்போதுதான் சமயத்தின் சிந்தனைகளும், நம்பிக்கைகளும் மக்களை நாடிச் செல்லும்.

அந்த வகையில் யாழ். குடாநாட்டில் ஏற்பட்டுள்ள கோஷ்டி மோதல்கள், குழுச் சண்டைகள், மதுபான விற்பனைகளின் மலிவுகள், கசிப்பு உற்பத்தி போன்றவற்றின் அதீத அதிகரிப்பிற்கு இங்கு இயங்கும் அமைப்புக்கள், பொது அமைப்புக்கள் மற்றும் சன சமூக நிலையங்கள், இளைஞர் அமைப்புகள் போன்றவற்றின் செயலூக்கம் இன்மையும் காரணம் என்பதை மறுத்துவிட முடியாது.

எனவே யாழ்ப்பாணத்தில் அடிக்கடி இடம்பெற்று வரும் கோஷ்டி மோதல்களை பொலிஸார் தீர்த்து வைப்பார்கள் என எதிர்பாராமல் மதகுருமாரும் பொது அமைப்புகளும் இணைந்து ஓர் வலுவான திட்டத்தை வகுக்கவும், இளைஞர் குழுக்களை ஒழுங்குபடுத்தவும் முனையவேண்டும். இல்லையேல் யாழ்ப்பாணத்தில் கோஷ்டி மோதல்கள் அதிகரிப்பதுடன் அதன் விளைவுகள் பாரதூரமானதாகவும் இருக்கும்.

# பிரபாவின் உரை பயங்கரவாத சமிக்ஞை; முப்படைகளையும் உடன் தயார்ப்படுத்துக!

## அதுரலிய ரத்னதேரர் அரசிடம் வேண்டுகோள்

(கொழும்பு)

முப்படையினரையும் எந்த நேரத்திலும், எந்த வேளையிலும், எத்தருணத்திலும் உஷார் நிலையில் வைத்திருக்குமாறு ஜாதிகஹெல உறுமயவின் பாராளுமன்ற உறுப்பினர் அதுரலிய ரத்னதேரர் அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவர் நேற்று முன்தினம் விடுத்துள்ள அறிக்கையின் மூலமாக அரசாங்கத்திடம் இவ் வேண்டுகோளை விடுத்துள்ளார்.

அரசாங்கம் அமைதி காத்து சமாதானத்திற்காகப் பாடுபட்டுக் கொண்டிருக்கும் இவ் வேளையில், விடுதலைப்புலிகளோ வன்முறைகளைக் கட்டவிழ்த்து விட்ட வண்ணம் உள்ளனர். இதனைத் தடுத்து நிறுத்தும் தருணம் வந்துவிட்டது. இராணுவத்தை மீண்டும் பயன்படுத்துவதற்கான தருணம் இதுவேயாகும்.

அத்துடன், குறுகிய காலத்திற்குள் விரைவான யுத்தத்தை மேற்கொண்டு தமது குறிக்கோளை அடைய முனையும் விடுதலைப்புலிகளைக் கவிழ்க்க முப்படைகளையும் தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும்.

விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனின் மாவீரர் தின உரையில்,

இடைக்கால நிர்வாகசபை யோசனையின் அடிப்படையில் சமாதானப் பேச்சுவார்த்தைகள் உடனடியாக ஆரம்பிக்கப்படவேண்டுமென்றும், இல்லாவிடின் தாம் மீண்டும் சுதந்திரப் போராட்டத்தில் குதிக்க வேண்டி வரும் எனவும் எச்சரிக்கை விடுத்திருந்தார்.

இவ்வுரை தெளிவானதொரு எச்சரிக்கை சமிக்ஞையாகும. தமது யோசனைகளின் அடிப்படையில் பேச்சுவா்த்தைகள் ஆரம்பிக்காவிட்டால 'யுத்தத்திற்கு நாங்கள் சொல்லவேண்டி வரும்' என்ற பயங்கரவாத சமிக்ஞையாகும்.

இதில் கவலைக்குரிய விடயம் என்னவென்றால், சிங்களவர்களாக இருந்தும் ஐக்கிய தேசியக் கட்சியினர் புலிகளின் யோசனைகளுக்கமைய பேச்சுவார்த்தையை மீண்டும் ஆரம்பிக்கவேண்டும் என்கின்றது.

ஜனாதிபதி தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்பு அரசாங்கமும் விடுதலைப்புலிகளின யோசனைகளுக்குள் தத்தளித்துக் கொண்டிருக்கின்றது.

நீண்டகாலம் தாக்குப்பிடிக்கக் கூடிய பாரிய யுத்தம் ஒன்றை ஆரம்பிக்க பிரபாகரனுக்கு மனோதிடமும், பலமுமில்லை. ஆனால், குறுகிய கால யுத்தத்தை மேற்கொண்டு யுத்த ரீதியில முக்கிய இடங்கள் சிலவற்றைக் கைப்பற்றும் திட்டம் புலிகளுக்குண்டு.

அதன் பின்னர், சர்வதேச அழுத்தத்துடன் மீண்டும் யுத்த நிறுத்தத்தை மேற்கொண்டு இடைக்கால நிர்வாகசபையைப் பெற்றுக்கொள்வதே பிரபாகரனின் நோக்கமாகும்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்களைப் பயன்படுத்தி பாராளுமன்றத்தைத் தமிழீழ மேடையாக மாற்றியமைத்து நாடகமாடுவதும் சிங்கள மக்களைக் கொதித்தெழச் செய்துள்ளது.

ஒரு சில சக்திகள் சிங்கள மக்களை உசுப்பிவிட்டு, புலிகளின் சூழ்ச்சிக்குள் அவர்களை பலியிட முனைவதை நாம் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும்.

வடக்கு-கிழக்கு வன்முறைகளைத் தூண்டி விட்டு, படைத்தரப்பால் அவற்றைத் தடுத்து நிறுத்த முடியாத அளவுக்குக் குழப்பகரமான சூழ்நிலையை உருவாக்குவதே பிரபாகரனின் திட்டமாகும்.

சமாதானத்தை விரும்பும் சிங்கள மக்கள் உட்பட அனைத்து மக்களும் புலிகளின் யுத்த அபாய அறிவித்தலுக்கு அச்சம் கொள்ளாது அதற்கு முகம் கொடுக்கத் தயாராக இருக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்வதாக அதுரலிய ரத்ன தேரர் தனது அறிக்கையில் மேலும குறிப்பிட்டுள்ளார். (ந-4)

# மரண தண்டனை அமுல்படுத்தியமைக்கு விளக்கம் கூறுகிறார் ஜனாதிபதி

(கொழும்பு)

நாட்டின் நன்மையைக் கருததிற்கொண்டு மரண தண்டனையை மீண்டும் அமுல்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு தாம் தயாா என ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.



நாட்டைச் சரியான பாதையில் இட்டுச்செல்ல தானும அரசாங்கமும் அா்ப்பணிப்புடன் செயற்படத தயாராக இருப்பதாக அவா தெரிவித்தார்.

ஜனாதிபதி மாளிகையில் நேறறு முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

தற்போது மரணதண்டனை அமுலுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. எனினும் இறுதியில் அதற்கான கையொப்பத்தினை யார் இடுவது? அது ஒருவரால் மாத்திரமே முடியும். மரணதண்டனையை அமுல்படுத்துவதற்கான உரிமை எனக்கு மட்டுமே உண்டு.

நாட்டிற்காக அனைத்தையும் செய்ய நான் தயாராகவே உள்ளேன். எனினும் அதற்குரிய செயற்பாடுகளை முன்னெடுப்பது கடினமான விடயமாக உள்ளபோதிலும், நாட்டை திருத்தவேண்டுமானால் அதனை மேற்கொள்ள வேண்டும் என அவர் அங்கு மேலும் தெரிவித்தார். (ந-4)

# தலங்கமவில் தமிழ் இளைஞர் சுட்டுக்கொலை

(கொழும்பு)

கொழும்பிற்கு வெளியே தலங்கமவில் நேற்று முன்தினம் இரவு தமிழ் இளைஞரொருவர் இனந்தெரியாத நபர்களினால் வீதியில் வைத்து சுட்டுககொல்லப்பட்டுள்ளாா.

ஏற்கனவே சிலாபத்தில் வசித்து வந்த இவர் தொழில் நிமித்தம் அண்மையில்தான் தலங்கமவிற்கு வந்திருந்தார்.

இவரது சடலம் இதுவரை அடையாளம் காணப்படவில்லை எனவும் வெள்ளை நிறக்காரில் வந்த துப்பாக்கிதாா்களே இவா மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்துவிட்டு தப்பிச் சென்றுள்ளாாகள என தலங்கம பொலிஸ் தரப்பு தகவல்கள் தெரிவித்தன.

இந்தக் கொலை பாதாள உலகத்துடன் தொடர்புடையதா? அல்லது தமிழ்க் குழுக்களுடன தொடாபுடையதா? என்பது குறித்து தாம் விசாரணை மேற்கொண்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை பாராளுமன்றத்திறகு அருகாமையில் சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடினாா என்ற குற்றச்சாட்டின் போில் தமிழ்ப் பெண்ணொருவா உட்பட மூவர் நேற்று முன்தினம் மாலை பொலிஸாாினால் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

இந்தப் பெண் அருகிலுள்ள வீடொன்றில் பணிப் பெண்ணாக பணியாற்றி வருகின்றாா. இருப்பினும் இம் மூவரும் எதற்காக அப்பகுதியில் நடமாடினாாகள் என்பது குறித்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகிறார்கள்.

இது ஒருபுறமிருக்க நுகே கொடயில் இதுவரை இலங்கையில் பாவனையிலில்லாத அதி நவீன ரக துப்பாக்கி மற்றும் கைத துப்பாக்கி ஆகியவற்றை ரூபா 5 இலட்சத்திற்கு விற்பனை செய்ய முற்பட்ட நபரொருவரையும்நேற்று முன்தினம் இரவு பொலிஸார் கைது செய்துள்ளார்கள். (க-4)

# மீள்குடியமர்வுக் கொடுப்பனவுகள் இன்னும் 10 நாட்களில் வழங்கப்படும்!

## இடைக்குறிச்சி மக்களுக்கு அதிகாரி உறுதிமொழி

(யாழ்ப்பாணம்)

இடம்பெயர்ந்த மக்களுக்கான மீள் குடியமர்வுக் கொடுப்பனவை வழங்கக்கோரி தென்மராட்சி இடைக் குறிச்சி மக்கள் நேற்றுக்காலை 9.00மணியளவில் யாழ். செயலகம் முன்பாக மறியல் போராட்டத்தில் ஈடுபடடனர்.

மறியல் போராட்டம் ஆரம்பமான சிறிது நேரத்தில், நிக்கொட் நிறுவனத்தின் மாவட்டத் திட்டமிடல் பிரதிப் பணிப்பாளர் சம்பந்தப்பட்டவர்களை அழைத்து இன்னமும் 10 நாட்களில் அவர்களுக்குரிய மீள் குடியமர்வுக் கொடுப்பனவுகளை வழங்க நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தார். இதனைத் தொடர்ந்து தென்மராட்சி இடைக்குறிச்சி மக்கள் தமது மறியல் போராட்டத்தைக் கைவிட்டுச் சென்றனர். (ந-5)

## சாயி அருளமுதம்



வணக்கம் என்பது ஒரு தினத்தில், குறிப்பிட்ட சில நேரங்களில் மட்டும் போட்டுக்கழற்றும் ஒரு சீருடையல்ல. உங்கள் ஒவ்வொரு சிந்தனையையும் இறைவனுடைய கரத்தில் தரிக்கக் கூடிய தகுதிவாய்ந்த ஒரு புஷ்பமாக்குங்கள். உங்கள் ஒவ்வொரு செயலையும் அன்பெனும் அமுதம் நிரம்பிய கனியாக்கி இறைவனது திருக்கரத்தில் வைக்கக்கூடிய புனிதமுடையதாககுங்கள். உங்களுடைய ஒவ்வொரு கண்ணீா துளியும் இறைவனுடைய திருவடிகளைக் கழுவக் கூடிய பரிசுத்தமும் தூய்மையும் கொண்டிருக்கட்டும்.

நன்றி

நாளாந்த நற்சிந்தனை

## பாதுகாப்பு அமைச்சின் செயலராக அசோக

பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக மேஜர் ஜெனரல் அசோக ஜெயவர்த்தனா நேற்று நியமிக்கப்பட்டார். பாதுகாப்பு அமைச்சின் செயலாளராகவிருந்த சிறில் ஹேரத் ஓய்வுபெற்றதையடுத்து அவரது இடத்திற்கு அசோக ஜெயவர்த்தனா நியமிக்கப்பட்டுள்ளார்.

இவருக்கான வரவேற்பு நிகழ்வு நேற்று பாதுகாப்பு அமைச்சின் செயலகத்தில் மிகவும் எளிமையான முறையில் நடைபெற்றது.

இதேவேளை வடக்குக் கிழக்கு மாகாண ஆளுநராக மேஜர் ஜெனரல் அசோக ஜெயவர்த்தனா பதவிவகித்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ச-8)

## ஸ்ரீமணி அத்துலத்முதலி நேற்று காலமானார்

போக்குவரத்து மற்றும் சுற்றாடல்துறை முன்னாள் அமைச்சர் ஸ்ரீமணி அத்துலத்முதலி நேற்றுக் காலமானார்.

புற்றுநோயால் பீடிக்கப்பட்டிருந்த இவர் நேற்று கொழும்பு தனியார் வைத்தியசாலையொன்றில் காலமானார். அவருக்கு வயது 58. ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கத்தில் அமைச்சராக இருந்த லலித் அத்துலத்முதலி கொல்லப்பட்டதை அடுத்து ஸ்ரீமணி அத்துலத்முதலி அரசியல் பிரவேசித்தார்.

ஸ்ரீமணி அத்துலத்முதலி 1994 ஆம் ஆண்டில் முதன்முறையாகப் பாராளுமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டார். 1994 ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தில் சுற்றாடல் மற்றும் போக்குவரத்து அமைச்சராக அவர் பதவி வகித்தார். அத்துடன் சிறிது காலம் மகளிர் விவகார அமைச்சராகவும் பதவிவகித்தார். (இ-9)

## கோப்பாய் துயிலும் இல்லத்தில் அநாதரவாக இரண்டு சைக்கிள்

(கல்வியங்காடு)

மாவீரர் தினத்தன்று கோப்பாய் இராசவீதியில் கைவிடப்பட்ட நிலையில் காணப்பட்ட சைக்கிள்கள் கோப்பாய் மாவீரர் துயிலும் இல்ல பொறுப்பாளரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு ஒப்படைக்கப்பட்ட 5 சைக்கிள்களில் மூன்று சைக்கிள்கள் உரிமையாளர்களினால் அடையாளம்காட்டி பெறப்பட்டுள்ளன. இன்னும் இரண்டு சைக்கிள்கள் உரிமைகோரப்படாத நிலையிலுள்ளன.

சைக்கிள்களைத் தவறவிட்டவர்கள் அடையாளம் காட்டிப்பெற்றுக்கொள்ளுமாறு துயிலும் இல்லப் பொறுப்பாளர் புவி கேட்டுள்ளார்.

இதேவேளை மாவீரர் தினத்தன்று தனியார் வீடுகளில் நிறுத்தப்பட்ட 7 சைக்கிள்கள் காணாமல் போனதாக தெரிவிக்கப்படுகிறது. எதிர்வரும் காலங்களில் சைக்கிள்கள் வாகனங்களை நிறுத்துவதற்கு விசேட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-74-84)

## இடைக்கால வரைபின்...

எனினும் விடுதலைப் புலிகளின் தலைவர் நிபந்தனையற்ற பேச்சிற்கு வருமாறு தமது மாவீரர்தின உரையில் கூறியிருப்பது அச்சமூட்டும் பாணியில் அமைந்துள்ளது. அவர் ஒரு நிகழ்ச்சியை மாத்திரம் மையமாக வைத்துக்கொண்டு பேச்சுவார்த்தைக்கு வருமாறு அழைத்திருப்பது மறைமுகமாக நிபந்தனைகளை விதித்துள்ளதாக அரசு கருதுகின்றது. அந்த நிபந்தனையானது உண்மையான பேச்சுவார்த்தைக்கு பாதகமாக அமைந்துள்ளது.

2003 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் இடைநிறுத்தப்பட்டுள்ள பேச்சுவார்த்தையை மீண்டும் ஆரம்பிப்பதற்கு அரசாங்கம் எடுத்த முயற்சிகளை மக்கள் நன்கு அறிவார்கள். இந்நிலையில் நோர்வே தரப்புடன் தாம் தொடர்ந்தும் இணைந்து செயல்பட்டுவருவதாக அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## புலிகளின் வரைபுக்கு...

பொருளாதார நெருக்கடிகளை நாம் உணர்கிறோம். அவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் உண்மையான எந்தக் கட்சியுடனும் எந்த அமைப்புடனும் பேச்சுவார்த்தை நடத்த நாம் தயார்.

ஆனால் மாவீரர் தினத்தன்று கருணா விடுத்த அறிக்கையில் பிரபாகரன்மீது பல்வேறு குற்றச்சாட்டுக்களையும் முன்வைத்துள்ளார். ஆகவே தமிழ் மக்களின் உண்மையான பிரதிநிதிகள் யார் என்ற கேள்வி எம்முன் தற்போது எழுந்துள்ளது.

1983 ஆம் ஆண்டு தமிழர்களைக் கொன்ற ஐக்கிய தேசியக் கட்சியினர் இன வாதிகளா? ஜே.வி.பியினர் இனவாதிகளா? அவ்வேளையில் தமிழ்மக்களைப் பாதுகாத்து அரவணைத்ததும் நாமே என்றும் நந்தன குணதிலக மேலும் தெரிவித்தார்.

இதேவேளை புலிகளால் முன்வைக்கப்பட்டுள்ள இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை வரைபை ஏற்று காலத்தை இழுத்தடிக்காது சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்குமாறும் அரசு தொடர்ந்து காலத்தைக் கடத்தினால் தாம் சுதந்திரப் போராட்டத்தை ஆரம்பிக்கப்போவதாகவும் விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் மாவீரர் தின உரையில் தெரிவித்திருந்தார்.

நடைமுறையில் உள்ள யுத்த நிறுத்த உடன்படிக்கை படுபயங்கரமான அழுத்தத்திற்குள் சிக்கியிருப்பதாகவும், நிலைமையைச் சமாளிக்க பேச்சுக்களை உடனடியாக ஆரம்பிக்குமாறும் கண்காணிப்புக்குழுத் தலைவர் அபாய அறிவிப்பை நேற்று விடுத்திருந்தார்.

இவற்றின் பின்னணியில் ஜே.வி.பியின் இந்த அறிவிப்பு தற்போதைய அமைதி முயற்சிகளுக்கு பாரிய நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளமை இங்கு சுட்டிக்காட்டத்தக்கது. (இ-4)

## வீடு புகுந்த கும்பல்...

### குருநகர்...

கூட்டுறவு சங்கங்களின் பிரதிநிதிகள் அப்பகுதி சனசமூக நிலையங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஆயினும் இக் கலந்துரையாடலில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் குறித்து தகவல் தெரிவிக்க மறுத்துவிட்டனர்.

இதேவேளை நேற்று அதிகாலை 3 மணியளவில் குருநகர்ப் பகுதியில் மேலும் ஒரு வீடு தீக்கிரையாக்கப்பட்டது. தொடர்ந்தும் அப்பகுதியில் பதற்றம் நிலவி வருகிறது. (ற-43,51)

அழைத்துள்ளனர். பிரகாசின் தம்பி வீட்டில் இல்லாததினால் பிரகாசே வெளியில் வந்துள்ளார். அவ்வேளை மேற்படி கும்பல் தாங்கள் கொண்டுவந்த வாள்களால் பிரகாசை வெட்டியுள்ளனர். அப்போது அதனைச் தடுப்பதற்குச் சென்ற பிரஸ்தாப நபரின் சித்தி மீது வாள்வெட்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வீட்டிலிருந்த ஏனையோர்களையும் வெட்டுவதற்கு அக் கும்பல் முயற்சித்ததாகவும், எனினும் அங்கிருந்தவர்கள் ஒளித்துக் கொண்டதால் தப்பிக் கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அண்மையில் பரமேஸ்வராச் சந்தியில் இடம்பெற்ற கோஷ்டி மோதலின் எதிரொலியாகவே இச் சம்பவம் இடம்பெற்றதாக தெரிவிக்கப்படுகின்றது. (ச)

## கிளிநொச்சியில் சந்திப்பு

இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிறஸ்கருக்கும் விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுக்குமிடையிலான சந்திப்பொன்று இன்று இடம்பெறவுள்ளது.

கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகத்தில் முற்பகல் இச்சந்திப்பு இடம்பெறவுள்ளது. இச்சந்திப்பானது வழமையான சந்திப்புக்களில் ஒன்றென இலங்கைக்கான நோர்வேத் தூதரகப் பேச்சாளரொருவர் தெரிவித்தார். (ச-4)

## "புத்தொளியின்" இறுதிச்சடங்கு இன்று

மூத்த எழுத்தாளரும் சமூகத் தொண்டனுமான புத்தொளி ந.சிவபாதம் நேற்று முன்தினம் காலமானார். இவரது இறுதிக் கிரியைகள் இன்று ஆனைக்கோட்டையில் உள்ள அவரது வீட்டில் நடைபெறவுள்ளது.


கண்ணீர் அஞ்சலி

ஜெயபாலன் கஜேந்திரன் (கஜன்)

பிறப்பு 31.03.1984 இறப்பு 01.12.2004



துடிக்கின்றோம் துடிக்கின்றோம்
தரணியில் கஜேந்திரனைக்காணாது
கலங்குகின்றோம் நாம்;
தம்பி கஜனை
இனி எப்போது காண்போம்;
தம்பியின் நினைவுகள்
எம்வாழ்நாள் முழுவதும் நீடிக்கும்;
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

வட்டுக்கோட்டை சங்கரத்தை

நண்பர்கள்

(C/812)



கண்ணீர் அஞ்சலி

சிறந்த எழுத்தாளரும், தமிழ்ப்பற்றாளருமான

ந.சிவபாதம்

(புத்தொளி சிவபாதம்)

அவர்களின் மறைவுச் செய்தி அறிந்து அதிர்ச்சியடைவதுடன், அவரின் பிரிவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

வலம்புரிக் குடும்பம்


## அரசாங்க அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்டத்தில் செய்யப்படவுள்ள கீழே குறிப்பிடப்பட்டுள்ள அபிவிருத்தி வேலைகளுக்கான கட்டிடவரைபடம் தயாரிப்பதற்கு அங்கீகரிக்கப்பட்ட கட்டிட கலைஞர் அல்லது ஒன்றியம் அல்லது நிறுவனம் போன்றவற்றிலிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. **யாழ்ப்பாண கச்சேரியின் பழைய பூங்காவை தாவரவியல் பூங்காவாக புனரமைத்தல்.**
   வருங்கால அபிவிருத்தியைக் குறிக்கோளாகக்கொண்டு கட்டிட வரைபடம் தயாரித்தல்.
2. **நல்லூர் பிரதேச செயலகக் கட்டிடம்.**
   நல்லூர் தமிழ் கலாசாரத்தை அடிப்படையாகக்கொண்ட இரண்டு மாடிக் கட்டிடம் அமைத்தல்.
3. **யாழ்ப்பாணம் கலாசார மண்டபம் அமைத்தல்.**
   யாழ்ப்பாண பொது நூலக கட்டிடத்திற்கு அமைவாக தமிழ்கலாசாரத்தை அடிப்படையாகக் கொண்டு கட்டிட வரைபடம் தயாரித்தல்.

விபரமான கட்டிட வரைபடம், பொறியியல் சார்பான வரைபடம் சமர்ப்பிக்கப்படவேண்டும்.

யாழ் மாவட்ட செயலக புனர்வாழ்வு திட்டப் பணிப்பாளரை கந்தோர் நாட்களில் சந்தித்து மேலும் விபரங்களையும் கட்டிடம் சம்பந்தமான விபரங்களையும், சம்பந்தப்பட்ட கட்டிட கலைஞர் அல்லது ஒன்றியம் அல்லது நிறுவனம் பெற்றுக் கொள்ளலாம். ஆரம்ப அடிப்படை வரைபடத்துடன் தமது கேள்விகளை 2004 டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி அல்லது அதற்கு முன் எனக்கு கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கப்படல்வேண்டும்.

**செ.பத்மநாதன்**
அரசாங்க அதிபர்,
யாழ்.மாவட்டம்
01.12.2004

(C/809)


புதிய கல்வியாண்டு - 2005
தரம் 01 முதல் O/L வரை
ஆரம்பம் 06.12.2004
தரமான கற்பித்தல்
அதன் பயன் உயர் பெறுபேறு
இது வெளிப்படை உண்மை.
மது கல்வி நிறுவனம்
டச்சுவீதி, இருபாலை கோப்பாய்
(C/811)



ஏல விற்பனை அறிவித்தல்

எமது வங்கிக் கிளையில் அடகுவைத்து 12 மாதத்திற்குள் மீளப்பெறப்படாத அல்லது கால எல்லை நீடிக்கப்பெறாத அடகுப் பொருட்கள் எதிர்வரும் 04.12.2004 சனிக்கிழமை ( காலை 9.00 மணி) எமது வங்கி அலுவலகத்தில் வைத்து பகிரங்க ஏலம் விடப்படும் என்பதை இத்தால் அறியத் தருகின்றோம்.

முகாமையாளர்
யாழ்.கிளை
ஹற்றன் நஷனல் வங்கி
(C/810)


## பிரதேச செய்தியாளர்களுக்கான முக்கிய கூட்டம்

எமது பிரதேச செய்தியாளர்களுக்கான முக்கிய கூட்டம் எதிர்வரும் 04.12.2004 அன்று முற்பகல் 10.30 மணிக்கு வலம்புரி கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

அதில் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

நிர்வாக உத்தியோகத்தர்
(வலம்புரி-சங்குநாதம்)





நாதன்ஸ் சினிமா
யாழ்ப்பாணம்
கா.நேரம் : 10.30, 2.30, 6.30 (பு.நே)
இன்று மட்டும் தனுஷ், தியா நடித்த
நாளைமுதல் (03.12.2004 முதல்)
அஜித், சினேகா நடித்த
ஜனா
தினசரி இரவு 9.00 (பு.நே)
Rambo - 3


இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.12.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.